விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 11 சனிக்கிழமை (25.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 37

## நாட்டின் முக்கிய பதவி வெற்றிடங்களுக்கு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் நியமனம்

- ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பணிப்பாளராக மேஜர் மல்வ ஆராய்ச்சி
- வடக்கு ஆளுநரின் இணைப்பு அதிகாரியாக றொகான் பலாங்கொட

23

## புலோலியில் திருடச் சென்ற இடத்தில் மோ.சைக்கிளை விட்டு தப்பிச் சென்ற கொள்ளையர்கள்

(கரணவாய்)
ஒரு கிழமைக்கு முன்னர் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் மீண்டும் கொள்ளையிட சென்ற இரண்டு கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.

24

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே என்பதை கோட்டாபய கூறவேண்டும்

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஜனாதிபதி தாம் நடத்திய விசாரணை பற்றிய முழு விபரங்களையும் முதலில் வெளிப்படுத்த வேண்டும். அல்லது அவ்வாறு அவர் நம்பத் தகுந்த விசாரணை எதனையும் நடத்தவில்லையானால் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு அவர் வழிவகுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளிடம் இருந்து ஒருவார்த்தை வராதா என்ற ஏக்கத்துடன் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் எமது மக்களின் நம்பிக்கைகளைத் தகர்க்கும் வகையில் காணாமல் போயுள்ள மக்கள் யுத்தத்தின் போது இறந்துவிட்டதாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியிடம் கூறியிருப்பதாக சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன.

இறந்தவர்களைமீண்டும் தன்னால் கொண்டுவர முடியாது என்றும் அவர்

23

## வவுனியாவில் முதியவரின் சடலம் மீட்பு

(வவுனியா)
வவுனியா கற்பகபுரம் பகுதியில் முதியவர் ஒருவரின் சடலத்தினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

23

## மன்னாரில் உண்டியல் உடைத்து பணம் திருட்டு

(மன்னார்)
மன்னார் தோட்டவெளி கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த, அற்புதம் நிறைந்த புராதன ஆலயமாக திகழும் தோட்டவெளி தூய அந்திரேயா அப்போஸ்தலர்

23

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழில் நேற்று ஆரம்பம்



(5ஆம் பக்கம் பார்க்க)

## சிவபூமி அரும்பொருட்காட்சியகம் நாவற்குழியில் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)
ஈழத் தமிழர்களின் வரலாற்றையும் அவர்களின் பண்பாட்டு பாரம்பரிய வாழ்வியலையும் ஆவணப்படுத்தும் சிவபூமி அரும்பொருட்காட்சியகம்

23

## 11 இளைஞர்கள் கடத்தல் வழக்கு
# 13 பேருக்கு நேற்று பிணை
## கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)
கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 13 பேரை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு
### வேலணையில் சம்பவம்

(வேலணை)
வேலணை வங்களாவடிச் சந்திக்கருகில் உள்ள கிணற்றில் இருந்து நேற்றுக் காலை குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

23

## சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் தேர்தலுக்கு பின்னரும் தொடர்ந்தன
### ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)
கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல் சம்பவங்களும், சமூகவலைத்தளங்களில் அவர்களுக்கு எதிரான வெறுப்புணர்வுப் பேச்சுக்களும் பதிவாகியதுடன், 3 இணைய ஊடகங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் மிகநீண்ட நேரம் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்

23

சத்யமேவ ஜயதே

## இந்தியத் துணைத் தூதரகம்

யாழ்ப்பாணம்

**அழைப்பிதழ்**

**குடியரசு நாள் கொடியேற்றல் நிகழ்வு – 2020**

இந்தியக் குடியரசு நாளின் 70வது ஆண்டுவிழா நிகழ்வை முன்னிட்டு காலை தேசியக் கொடியேற்றல் நிகழ்வு 26 ஜனவரி 2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு இல 14 மருதடி வீதியில் அமைந்துள்ள யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெறும்.

அனைத்து இந்திய குடிமக்களையும், இந்திய வம்சாவளியினரையும், இந்திய நலன்விரும்பிகளையும் நிகழ்வில் பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு

1. அனைவரையும் காலை 8.30 மணிக்கே வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்
2. வருகைதரவுள்ள அனைவரும் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சான்றுடன் வருகை தரவும்

(C-9055)


# வடக்கு கிழக்கில் வாழுகின்ற 28 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் 28 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான திட்டத்தை சமூக வலுவூட்டல் அமைச்சு ஆரம்பித்துள்ளது. இதன் முதல் கட்டமாக 7 ஆயிரம் வீடுகளை அமைத்து பயனாளிகளுக்கு வழங்க திறைசேரி அனுமதியளித்துள்ளது.

12 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் அமைக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தில் மாதிரி வீடு பதுளையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வீட்டை யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலாளர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

புதிய அரசு பதவிக்கு வந்த பின் அமைச்சரவையில் சமூக வலுவூட்டல் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் கீழ் மீள்குடியேற்ற அமைச்சுக்குரிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. அதனால் சமூக வலுவூட்டல் அமைச்சு, வடக்கு - கிழக்கில் 28 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக 7ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான ஒப்புதலை திறைசேரி வழங்கியுள்ளது. (ஞா)


**வேலையாள் தேவை** கிளிநொச்சியில் இயங்கும் பிரபல Hotel ஒன்றிற்கு
*உதவி முகாமையாளர் (மும்மொழி தேர்ச்சி)
*சமையலாளர் (இந்தியன், சைனிஸ்)
*சமையல் உதவியாளர் தேவை
உணவு,தங்குமிடம் உண்டு.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
(c-9061) தொடர்பு:077 938 5521

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட (புறொயிலர்) கல்பேட், பேரன்ஸ், ஊர்ச் சேவல் என்பன சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**நந்தினி பாம்**
இராச வீதி, கல்வியங்காடு.
T.P: 077 968 3028
(1964)


## தைப்பொங்கல் விழா

நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும் தைப்பொங்கல் விழா யா/செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நொதேண விளையாட்டுக் கழகத் தலைவர் க.நிஷாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி P.S.M. சார்ள்ஸ் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நா.வேதநாயகம், வடமகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஞா)



**வேலையாட்கள் தேவை**

நெல்லியடியில் உள்ள கூல்பார் ஒன்றுக்கு அனுபவம் உள்ள வேலையாள் தேவை. பால்கோவா, லட்டு, மஸ்கட் தயாரிக்கக் கூடியவர்கள் உடனடியாகத் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(C-9059)

தொடர்புகளுக்கு:-
076 424 8835


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ் தெடுத்தனை,கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் கிழக்கு அத்தாயை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கனகசபை செல்வராசா

(முன்னாள் சென்றல் சேவிஸ்ரேசன் உரிமையாளர்–நெல்லியடி,
முன்னாள் இ.போ.சபையின் இயந்திரம் திருத்தும் வினைஞர்–பருத்தித்துறை,
முன்னாள் யாழ் மாவட்ட பாரவூர்தி உறுப்பினர்.)

மண்ணுலகில் 07.05.1959

விண்ணுலகில் 05.02.2019

திதி:25.01.2020

அன்புத் தெய்வமே எங்கள் அப்பா
ஆண்டொன்று கழிந்தாலும் ஆறவில்லை - எம் மனது
கணப்பொழுதும் எண்ணவில்லை எம் ஒளி விளக்கே
நீங்கள் இமைப்பொழுதில் எம்மை விட்டுப் பிரிவீரென
பாசமுடன் வளர்த்துவிட்டு பாரை விட்டுச் சென்றீர்கள்
பாவிகள் நாம் தவிக்கின்றோம் - ஏனப்பா போனீர்கள்
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமோ எங்கள் இதயம்...
குறையேதும் இல்லை நிறைகுடமே நீங்களப்பா - இறைவன்
குறைவைக்க எண்ணியதால் ஆயுளைத்தான் குறைத்தானோ
கண்ணீரை நாம் அறியாமல் வளர்த்த அப்பாவே இன்று எம்மை
கண்ணீரில் ஆழ்த்திவிட்டு விண்ணோடு சென்றீர்கள்–வேதனையில்
வாடுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.
077-9587281

அல்வாய் கிழக்கு,
அத்தாய்.

(c-9044)

## மனித வளத்தைப் பாதுகாத்தால் வடபகுதி முன்னேறும்

# கப்பலோட்டிய தமிழன் படகு மூலம்

# அகதியாக செல்லும் துர்ப்பாக்கிய நிலை

### கண்காட்சி நிகழ்வில் ஆளுநர் கவலையுடன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

**கப்பலோட்டிய தமிழன் எனப் பெயர் பெற்ற தமிழினம் தற்போது படகுகள் மூலம் அகதிகளாக வெளிநாடு செல்லும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கவலை வெளியிட்டுள்ளார்.**

யாழ்.முற்றவெளிப்பகுதியில் நேற்றுக்காலை ஆரம்பமான யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்நாட்டில் இடம்பெற்ற முப்பது வருட காலபோர் காரணமாக வடபகுதியில் இருந்து தொழில் முயற்சியாளர்கள் பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளனர். மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் வடபகுதியைச் சேர்ந்த பலர் இன்று பல்வேறு தொழிற்சாலைகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறு வடபகுதியைச் சேர்ந்தவர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறியதால் வடபகுதியின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தும் இந்த (இன்றைய) நிகழ்விற்கு மலேசியா வாழ் தொழில் முயற்சியாளர்கள் வருகை தந்தமையையிட்டு மகிழ்வடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் மனித வளம் என்பது முதன்மையானது.

துறைசார்ந்த நிபுணர்கள் நாட்டை விட்டு வெளி யேறுவது குறித்து மாகாணத்தின் அபிவிருத்திக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தம்.

எனவே எமது பிரதேசத்தில் இருந்து வெளியேறிய தொழில் முயற்சியாளர்களை, நிபுணர்களை மீண்டும் எமது பிரதேசத்தில் இணைத்து எதிர்காலத்தில் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு இந்தக் கண்காட்சி முன்னுதாரணமாக அமைய வேண்டும் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-10)

---

# குண்டு வெடிப்பு குற்றவாளிகளுக்கு சாதகமாக கொழும்பில் பொலிஸ் பதிவை தடுத்தீர்களா?

### மனோ கணேசனிடம் சி.ஐ.டியினர் விசாரணை



(கொழும்பு)

கொழும்பில் வீடுகள் தோறும் பொலிஸார் மேற்கொண்ட விபரக்கோவை திரட்டு என்ற பொலிஸ் பதிவை ஏன் தடுத்து நிறுத்தினீர்கள்? இதன் மூலம் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு குற்றவாளிகளை முன்கூட்டியே கண்டுபிடிக்க முடியாமல் போனதை ஏற்றுக்கொள்கிறீர்களா? என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசனிடம் விசாரணையை மேற்கொண்டுள்ள குற்றவியல் புலனாய்வு திணைக்கள பொலிஸ் அதிகாரிகள், மனோவின் வீட்டுக்குச் சென்று வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

இதுபற்றி மனோ எம்.பி. தெரிவிக்கையில்,

கொழும்பில் தமிழர் செறிந்து வாழும் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, மட்டக்குளிய, முகத்துவாரம், கொள்ளுப்பிட்டி, தெகிவளை, கல்கிசை, கொகுவளை, கிருலபனை, தெமட்டகொடை, மருதானை, புறக்கோட்டை மற்றும் கொழும்புக்கு வெளியே வத்தளை, நீர் கொழும்பு ஆகிய பொலிஸ் வலய பிரதேசங்களில் பொலிஸார் விபரக்கோவை திரட்டு என்ற பொலிஸ் பதிவை மேற்கொள்ள முயற்சிப்பது, காலம்காலமாக நடைபெறும் கைங்கரியமாகும். இதை நான் எப்போதும் எதிர்த்து தடுத்து நிறுத்தியிருக்கிறேன். இதற்கு முந்தைய மகிந்த ஆட்சியிலும் சரி, அதற்கு பின் வந்த நமது ஆட்சியிலும் சரி, இதற்கு நான் இடம் கொடுத்ததே இல்லை.

சந்தேக நபர்கள் மீது விசாரணை மேற்கோள்வது ஒன்று. ஆனால், அனைத்து வீடுகளுக்கும் சென்று விபரக்கோவை திரட்டுவதும், அதிலும் தமிழ் குடும்பங்களை குறி வைப்பதும் இன்னொன்று. பொலிஸார் திரட்டும் விபரக்கோவைகள், மூன்றாம் தரப்பு சமூகவிரோதிகளிடம் சென்று சேருவதாக நான் சந்தேகப்படுகின்றேன். இதை நான் அனுமதிக்க முடியாது.

இந்நிலையில், பொலிஸ் பதிவை நான் தடுத்து நிறுத்தியதால்தான், உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு குற்றவாளிகளை முன்கூட்டியே கைது செய்ய முடியாமல் போனது என்ற குற்றச்சாட்டை, அவ்வேளை கொழும்பில் பிரதி பொலிஸ் அதிபராக இருந்தவர், ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பில் விசாரித்து வரும் விசேட விசாரணை குழுவிடம், எனக்கு எதிராக தெரிவித்துள்ளார்.

இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் குற்றவியல் விசாரணை பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமராச்சி திலகரத்ன, என்னிடம் விசாரணை வாக்குமூலம் பெறவேண்டும் என அறிவித்து நேரம் கோரியிருந்தார்.

அதிகாரிகளை எனது வீட்டுக்கு வந்து வாக்குமூலம் பெறும்படி நான் கூறியிருந்தேன். இதன்படி சி.ஐ.டி. பிரதம பரிசோதகர் ஹெல உடகே தலைமையிலான பொலிஸ் குழுவினர் என் வீட்டுக்கு வந்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**எனது வாக்கு மூலத்தில்**

"இது மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடும் வேலை. கடைசியாக கொழும்பில் தமிழ் மக்களை நோக்கிய பொலிஸ் பதிவுகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டன, கடந்த வருடம் ஜனவரியில் என எனக்கு ஞாபகம் இருக்கின்றது. அப்போது, இதுபற்றி வழமை போல், அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பிரதி பொலிஸ்மாதிபர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் மட்டுமல்ல, பொலிஸ் துறையை தன் கையில் வைத்திருந்த, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் அமைச்சரவையில் இந்த விடயத்தை எழுப்பி, விவாதித்து இருந்தேன். சந்தேக நபர்கள் மீது விசாரணை மேற்கொள்ளுங்கள். ஆனால், வீடு வீடாக, குற்றவாளிகளை போன்று, தமிழரை தேடி சென்று ஒட்டுமொத்தமாக பொலிஸ் பதிவு செய்யும் நடைமுறையை உடன் முடிவுக்கு கொண்டுவரும்படி கூறி இருந்தேன். அதன்படி அது முடிவுக்கு கொண்டு வரப்பட்டது."

"இது நடந்து, நான்கு மாதங்களுக்கு பின்னரே ஏப்ரல் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இந்த குண்டு வெடிப்புக்கு வந்த நபர்கள் கொழும்பில் ஜனவரி மாதமே வந்து தங்கி இருந்திருப்பார்கள் என்பது நம்ப முடியாத பழி வாங்கல் சிந்தனை. உண்மையில், இந்த குண்டு வெடிப்பு தொடர்பிலும், குண்டு வெடிப்பு பயங்கரவாதி சஹ்ரான் கும்பல் தொடர்பிலும், நட்பு நாடு என்ற முறையில் இந்திய புலனாய்வு துறை முன்கூட்டிய தகவல்களை இலங்கை பொலிஸ் துறைக்கு வழங்கி இருந்தது. குண்டு வெடிப்பு நிகழ சில மணிகளுக்கு முன்கூட இடம், நேரம் உள்ளிட்ட தகவல்களை வழங்கி இருந்தது.

இத்தகவல்களை இலங்கை குற்றவியல் புலனாய்வு திணைக்களம் தேடி கண்டுபிடிக்கவில்லை. இந்திய புலனாய்வு துறையே இலங்கைக்கு கொடுத்தது. இப்படி கொடுக்கப்பட்ட துல்லியமான தகவல்களைகூட சரியாக பயன்படுத்தி, குற்றங்களை தடுத்து நிறுத்தி, அப்பாவி மக்களை காப்பாற்றி, குற்றவாளிகளை கைது செய்ய, இலங்கை பொலிஸாரால் முடியவில்லை.

சம்பவம் நடைபெற்ற பொலிஸ் வலய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸ்மா அதிபர், பொலிஸ் துறையை தன் கையில் வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தம் கடமைகளில் இருந்து முற்றாக தவறியுள்ளனர்.

தமது கடமை தவறலை மறைக்கவே, நம்பி வாக்களித்த மக்களுக்காக கடமையை செய்யும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான என் மீது திட்டமிட்டு பழிவாங்கும் முகமாக அபாண்டமாக இந்த குற்றம் சாட்டப்பட்டுள்ளது எனக்கூறி, எனது வாக்கு மூலத்தை எழுத வைத்து, கையெழுத்திட்டு கொடுத்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# நல்லாட்சி பொதுநிதியை நாசமாக்கியது

### மைத்திரியை சாடிய ரோஷன்

(பொலநறுவை)

நல்லாட்சி அரசாங்கம் அபிவிருத்தி என்ற பெயரில் பொது நிதியை நாசமாக்கியது என அமைச்சர் ரோஷன் ரணசிங்க குற்றம் சாட்டினார்.

பொலநறுவையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். "மொரகஹகந்த, களுகங்கை நீர்த்தேக்கம் ஒரு மிகப் பெரிய திட்டம்.

ஆனால் குறித்த நீர்த்தேக்கங்களில் நீர் இல்லை. இந்நிலையில் மக்கள் அதில் நீர் நிரம்பும் என்று பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

அதாவது மொரகஹகந்த மற்றும் களுகங்கை திட்டங்கள் கைகளும் கால்களும் இல்லாத குழந்தையைப் போல இருக்கின்றன.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தத் திட்டத்தால் இப்பகுதி மக்கள் பெரும் பயனடைவார்கள் எனவும் மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் ஊடகங்களில் தெரிவித்திருந்தார்.

ஆனால் உண்மையாக இந்த மக்கள் 7 வருட காலத்திற்கு மேலாக இன்றும் நீருக்காக அவதிப்பட்டே வருகின்றனர்.

மேலும் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தி திட்டங்கள் பயனற்ற ஒன்றாகவே காணப்படுகின்றன.

இவர்களின் செயற்பாட்டால், அநியாயமாக பொதுநிதி வீணானது மாத்திரமே மிச்சம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சொந்த மண்ணில் நியூஸியை பந்தாடிய இந்தியா



நியூஸிலாந்து அணிக்கெதிரான முதலாவது ரி-20 போட்டியில், இந்தியா அணி ஆறு விக்கெட்டுகள்ால் சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில், இந்தியா அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றுள்ளது.

ஒக்லாந்து- ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 203 ஓட்டங்களை குவித்தது.

இதன்போது நியூஸிலாந்து அணி சார்பில், மார்டின் கப்டில் 30 ஓட்டங்களையும், கொலின் முன்ரோ 59 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 51 ஓட்டங்களையும், ரோஸ் டெய்லர் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களையும், பெற்றுக் கொண்டனர்.

மேலும், கொலின் டி கிராண்ட்ஹோம் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், டிம் செய்பர்ட் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க, மிட்செல் சான்ட்னர் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இந்தியா அணியின் பந்துவீச்சில், ஜஸ்பிரிட் பும்ரா, சர்துல் தாகூர், யுஸ்வேந்திர சஹால், சிவம் டுபே மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 204 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியா அணி, 19 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இந்தியா அணி ஆறு விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது இந்தியா அணி சார்பில், ரோஹித் சர்மா 7 ஓட்டங்களையும், கே.எல். ராகுல் 56 ஓட்டங்களுடனும், விராட் கோஹ்லி 45 ஓட்டங்களுடனும், சிவம் டுபே 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஸ்ரேயஸ் ஐயர் 58 ஓட்டங்களுடனும், மணீஷ் பான்டே 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சில், இஷ் சோதி 2 விக்கெட்டுகளையும், மிட்செல் சான்ட்னர் மற்றும் பிளயர் டிக்னர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 29 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 5 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஸ்ரேயஸ் ஐயர் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி, நாளை ஒக்லாந்து- ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## நொதேன் விளையாட்டுக் கழகத்தின் மரதன் ஓட்டப்போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும் மரதன் ஓட்டப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடு இன்றி கலந்து கொள்ளவுள்ளனர்.கல்வியங்காடு சந்தியில் காலை 5.30 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டி ஆரம்பமாகும் என ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

ஆண்களுக்கு 7 கிலோ மீற்றரும் பெண்களுக்கு 5 கிலோ மீற்றருமாக போட்டி இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறுவொருக்கு வெற்றிக்கேடயம், பணப்பரிசு, பதக்கம் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

மேலும் பத்து பேருக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படவுள்ளது.

## அரச காணிகளின் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகள்

வடமாகாண அரச காணிப் பிணக்குகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் விசேட "விசாரணைக்குழு" நியமிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அரச காணிகள் தொடர்பான பின்வரும் விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகளை இந்த விசாரணைக்குழுவிற்கு அனுப்பி வைக்க முடியும்.

- அரச காணிகள் பகிர்ந்தளித்தல் தொடர்பான முறைப்பாடுகள்.
- அரச காணிகளில் அத்துமீறி குடியிருப்போர் தொடர்பான முறைப்பாடுகள்.
- அரச காணிகளை முறையற்ற விதத்தில் கைமாற்றல் மேற்கொண்டமை தொடர்பான முறைப்பாடுகள்.
- அரச காணிகளை காணிச்சட்ட விதிகளுக்கு முரணாக போலி ஆவணங்கள் மூலம் கையகப்படுத்தியமை தொடர்பான முறைப்பாடுகள். (வெளிப்படுத்தல் உறுதி மற்றும் ஆட்சி உறுதி)
- அரச காணிகள் வழங்கல் தொடர்பாக மக்கள் ஏமாற்றப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்
- அரச காணிகள் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள்.

மேற்படி முறைப்பாடுகளை மக்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ மற்றும் மின்னஞ்சல் (Email) மூலமாகவோ, 2020.02.15ம் திகதிக்கு முன்னராக சமர்ப்பித்தல் வேண்டும்.

தபால் முகவரி : தலைவர்,
அரச காணிகள் பிணக்குகள் விசாரணைக்குழு,
ஆளுநர் செயலகம்,
வடமாகாணம்,
கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி (Email) : npgovland@gmail.com

(c-9058)

## சிறுபான்மையினர் மீதான...

கங்கள் மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டும். அனைத்து வேட்பாளர்களுக்கும் சமனான தேர்தல் களமொன்றை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய விதமாக சட்டங்கள் இயற்றப்படுவதுடன், சமூகவலைத்தளங்களில் முன்னெடுக்கப்படும் தேர்தல் பிரசாரங்களை ஒழுங்குபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பவை உள்ளடங்கலாக 23 விதப்புரைகளையும் தமது அறிக்கையில் உள்ளடக்கியிருக்கிறது.

சர்வதேச தேர்தல் கண்காணிப்புக்கான கோட்பாடுகள் பிரகடனத்திற்கு இசைவான முறையில் கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவிற்கு அழைப்புவிடுத்திருந்தது.

அதன்படி இலங்கைக்கு வருகைதந்த 60 குறுகிய மற்றும் நீண்டகால கண்காணிப்பாளர்களைக் கொண்ட குழு 297 வாக்களிப்பு நிலையங்களுக்கும், 25 இற்கும் அதிகமான வாக்குகளை எண்ணும்·நிலையங்களுக்கும் விஜயம் செய்திருந்தது. அதன்படி அவதானிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அக்குழு தமது பூர்வாங்க அறிக்கையை நவம்பர் 18 ஆம் திகதி சமர்ப்பித்தது.

அதன்பின்னர் டிசம்பர் நடுப்பகுதி வரை அந்தக்குழு இலங்கையில் தங்கியிருந்து தேர்தலுக்குப் பின்னரான காலகட்டத்தில்-தெரிவிக்கப்படக்கூடிய முறைப்பாடுகளையும், வேண்டுகோள் களையும் அவதானித்தது.

அந்தச் செயன்முறைகளுக்குப் பின்னர் சுமார் இருமாதங்கள் கழித்து மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான தேர்தல் கண்காணிப்பாளர் மரிஸா மத்தியாஸ், தேர்தல் செயன்முறைகளில் எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய மேம்பாடு தொடர்பான 23 விதப்புரைகளுடன் கண்காணிப்புக் குழுவின் இறுதி அறிக்கையை நேற்று கொழும்பிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில்வைத்து வெளியிட்டு வைத்தார். (ஞா)

# யாழில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஆரம்பம்












(படங்கள்:- வர்ணன்)



(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்றுக்காலை யாழ். முற்றவெளிப் பகுதியில் ஆரம்பமானது.

சர்வதேச முதலீட்டாளர்களை வடபகுதி நோக்கி ஈர்க்கும் பொருட்டும் இலங்கையில் உள்ள முதலீட்டாளர்களை வடபகுதியில் அறிமுகப்படுத்தும் விதமாக மக்களைக் கவரும் வண்ணம் கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து கொண்டார்.

ஏனைய விருந்தினர்களாக யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், யாழ்.இந்தியத்துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், வெளிநாட்டு தொழில் முயற்சியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-10-18)

# குப்பிழானில் கொள்ளைச்சம்பவங்கள் அதிகரிப்பு

## கட்டுப்படுத்த விழிப்புக்குழு அமைக்குமாறு பொலிஸார் அறிவுரை





(குப்பிழான்)

குப்பிழானில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்கள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை குப்பிழான் விக்னேஸ்வரா சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

குப்பிழான் வடக்கு, தெற்கு கிராம உத்தியோகத்தர்களுக்கும், சுன்னாகம் பொலிஸாருக்கும் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கமையவே குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த. கணேசநாதனின் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அத்துல கருணாபால, குப்பிழான் வடக்கு கிராம உத்தியோகத்தர் அ.அகிலன், ஓய்வு நிலை குப்பிழான் தெற்கு கிராம உத்தியோகத்தர் சோ.பரமநாதன், கிராம இளைஞர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் இடம்பெற்றது.

குப்பிழான் கிராமத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக குப்பிழான் தெற்கு மற்றும் குப்பிழான் வடக்குக்குத் தனித்தனியான விழிப்புக் குழுக்களை உருவாக்குமாறு வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுக் கொண்டார்.

எனினும், குப்பிழான் தெற்குக்கென தனியான விழிப்புக் குழுவை அமைப்பதிலுள்ள சிக்கல்கள் தொடர்பில் சில இளைஞர்கள் எடுத்துக் கூறினர். இதனையடுத்து குப்பிழான் வடக்கு இளைஞர்கள் பலரின் முன் வருகையால் அந்தப் பகுதிக்கான விழிப்புக்குழு உருவாக்கப்பட்டது.

குப்பிழான் தெற்குப் பகுதியில் குறிக்கப்பட்ட நேரத்திலேயே அண்மைக்காலமாக கொள்ளையர்களின் அட்டகாசம் காணப்படுவதால் அந்நேரத்தில் சுன்னாகம் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட வேண்டுமென வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சுன்னாகம்பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை பொலிஸாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனையடுத்து குப்பிழான் தெற்குக்கென விழிப்புக் குழுவொன்றை அமைப்பதற்கான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படுமென வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (இ-18)

## இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அதிர்ஷ்டகரமான நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மேடம்:** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** அரைகுறையாய் இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வேலைச்சுமை கூடும் நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், சயனக்குறைவான நாள்.

**கடகம்:** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொட்ட காரியங்களில் வெற்றி பெற அனுமனை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், பகைவர்கள் விலகுவர், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.

**தனுசு:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தன வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, கலகலகப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** மன்நிறைவு கூடும் நாள், பொது வாழ்வில் புகழ்கூடும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

இராசி பலன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக் | | | |
| சூரி, புத, சந் | | | |
| சனி.குரு கேது | செவ் | | |


சந்திராஷ்டமம்
திருவாதிரை

**25.01.2020**
தை 11, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
பிரதமை பின்னிரவு 4.39 மணிவரை
திருவோணம் பின்னிரவு4.51மணிவரை
சுபநேரம் 3.36-5.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை

நல்லது நடக்கும் என நம்பு
தீயதை எதிர்கொள்ளத் தயாராயிரு
வளவன்

# "உலப்பிலா ஆனந்தமான தேன்துளியே நாவற்குழி அரும்பொருட்காட்சியகம்"

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் 72 வருடங்கள் உருண்டோடி விட்டன. பாராளுமன்றமும் வடமாகாண சபையும் மின்னல் மின்னி மறைந்தாற்போல வந்ததும் போனதுமாயின. உருப்படியாக எதைச் செய்து முடித்தோம் என்ற கேள்விக்கு யாரைக் கேட்பது என்று தேட வேண்டியுள்ளது. எமது பூர்வீக வரலாற்றின் அடையாளங்களை மையம் கொள்ளுமாறு நிரந்தரமாக்கிப் பேணவும் பயன் பெறுமாறு காட்சிப்படுத்தவும் பாராளுமன்ற உறுப்பினர்களாலோ படித்த கல்விசார் புலமையாளர்களாலேயோ இற்றைவரை முடியவில்லை. அவர்களால் முடியாததென்று எவராலும் சொல்ல முடியாது. ஏனென்றால் பணம் இருந்தது. அரச நிலம் இருந்தது. ஆளணி இருந்தது. ஆதரவு இருந்தது. சொத்துப் பத்துக்கள் ஏராளம் இருந்தன. மலிவான விலையில் காணிகளும் நாற்சார் வீடுகளும் நிரம்பிக் கிடந்தன. இத்தனை அசையும் அசையாச் சொத்துக்கள் இருந்த போதும் தூரநோக்கோடு தமிழர் தம் மரபுரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று எவரும் சிந்திக்கவே இல்லை. சுயநலமாகவே சிந்திக்கின்றார்கள். இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே செய்ய முடியாத உன்னதமான ஒரு அரும்பெருங் காட்சியகத்தை 12 பரப்புக்காணியில்



மூன்று மாடிக் கட்டடங்கள் பயன்படும்படியாக அமைத்திருப்பது இமாலய சாதனையாகும். ஒவ்வொரு அங்குலத்தையும் நூதனங்களாலே ஆதனங்களாக்கப்பட்டுள்ளன.

ஆறு.திருமுருகனின் அற்புதம் இது! ஆனந்தம் இது. மன்னர்கள் தொட்க்கம் மாதவம் புரிந்த ஞானிகளும்;

மண்ணும் மனிதமு மாக வாழ்ந்த மாண்புடைய புலவர்களும் பண்டிதர்களும்

விண்ணவரும் நண்ணிடும்படியான

சமய தமிழ் ஒப்புரவாளர்களும்;

கண்களையே களைக்க வைக்கும் காண்பரிய ஊடக ஏடுடைய ஒலி ஒளி விம்பங்களும், பிம்பங்களும்,

பண்சுமந்த பாரம்பரிய பண்பாட்டு மரபுவழி சிற்பங்களும், சித்திரங்களும், பத்திரங்களும், பாத்திரங்களும் அழகு ஒழுகும் ஆதியந்தமுடைய பொக்கிஷங்களும் முதுசொம்களும் சிவபூமி அறக்கட்டளை ஸ்தாபகரும் இயக்குநரும் தலைவருமான ஆறு.திருமுருகனையும் சிவ பூமி அறக்கட்டளை குடும்பத்தவர்களையும் வாழ்த்தவும் வரம் பெறவும் வைத்துள்ளன.

நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து முதிர்ந்து எதைச் சாதித்தோம் என்ற கேள்விக்கு விடை தேட இனியாவது ஓர் உபகாரத்தை இந்த அரும் பொருள் நூதனசாலைக்குக் காணிக்கை ஆக்குவோம்.

அவை ஏடாகவோ, சுவடியாகவோ, படிமமாகவோ, பத்திரமாகவோ, பாத்திரமாகவோ, நூலாகவோ, நாணயமாகவோ, நகை வகைகளாகவோ, சிற்ப சித்திர வடிவங்களாகவோ, வார்ப்புக்களாகவோர், கோப்புக்களாகவோ, எதுவாகவோ இருக்கட்டும். அல்லது விரும்புங்கள்.

ஆம்! சிவபூமியைத் தவமாக்குவோம். கண்ணைத் .துயின்று அவமே காலத்தை வீணாக்காமல் சீவனைச் சிவமாக்குவோம்.

சந்திரனில் ஒரு ஆம்ஸ்ரோங் சாதனை படைத்ததுபோல நம் மண்ணில் ஒரு ஆறு.திருமுருகன் கால்பதித்து நமக்கு வரமாகின்றார். சிகரம் தொட்ட சாதனையைக் காண்பீர்! தொட்டு வணங்குவீர்! வாழ்த்துவீர்.

கே.எஸ்.சிவஞானராஜா

## சிவபூமி அரும்பொருட்காட்சியகத் திறப்பு விழாவில் யாழ்.தமிழ்ச்சங்கம் வழங்கும் சிறப்பு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் புதிதாக அமைக்கப்பட்ட சிவபூமி அரும்பொருட் காட்சியக திறப்பு விழா இன்று சனிக்கிழமை இடம்பெறுவதைத் தொடர்ந்து இரண்டாம் நாள் நிகழ்வுகளின் போது நாளை ஞாயிற்றுக்கிழமை (26.01.2020) மாலை 4 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினர் வழங்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

தமிழ்ச்சங்கத்தின் பொருளாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதியுமான பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் ஆசிரியர் ந.கணேசமூர்த்தி வரவேற்புரை ஆற்றுவார். சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசியுரை வழங்குவார். தமிழ்ச்சங்க பெருந் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அரும்பொருளகம் நமது பாரம்பரியத்தைப் பேண்தகு களம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றுவார்.

மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் "தொன்மை மறவோம்" என்ற பொருளில் கவியரங்கம் இடம்பெறும். இதில் கவிஞர்களான த.ஜெயசீலன், கலாநிதி ச.முகுந்தன், நாக. சிவசிதம்பரம், தர்மினி ரஜீவன் ஆகியோர் பங்கு கொள்வர்.

தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் "தலைமுறை கடந்தும் தம் வாழ்வியலை தக்க வைக்கும் பண்பியல் தமிழர்களிடையே பெருகி வருகிறதா? அருகி வருகிறதா?" என்ற பொருளில் பட்டிமண்டபம் இடம்பெறும். இதில் வை.விஜயபாஸ்கரன், இ.சர்வேஸ்வரா, கு.பாலசண்முகன், தெ.ஹர்சன், ந.ஐங்கரன், ஜீவா.சஜீவன் ஆகிய பேச்சாளர்கள் பங்கு கொள்வர். (இ-7)

## ஆண்கள் விடுதி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடி தொழிற் பூங்கா வளாக விடுதி அங்குரார்ப்பண விழாவும் ஆண்கள் விடுதி திறப்பு விழாவும் இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் தொழில் பூங்கா வளாகத்தில் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான ஏ.எஸ்.அற்புதராஜ் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் கலந்து கொள்வார். (இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை மணிக்கூட்டு வீதி அருள்மிகு ஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தான (10 ஆவது) வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.(இ-5)

## தூதுவர்-முதல்வர் சந்திப்பு




(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் டிரினி ஜோர்னலி ஸ்கெடல் யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட்டை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அந்நாட்டு தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் யாழ்.மாநகர முதல்வரை யாழ்.மாநகர சபையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் போது தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்தனர். (இ-101)

## அறநெறிப்பாடசாலை ஆண்டுவிழா

(குப்பிழான்)

கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலையின் ஒன்பதாவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெறும்.

யாழ்.விஷன் பொறுப்பாளர் கந்தையா சுசீந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கௌரவ விருந்தினராக வடமாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ரி.தியாகமூர்த்தி, யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், யாழ்.கல்வி வலய ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-18)

# உலகை உலுக்கும் பாம்பு வைரஸ் தொற்று வடக்கு மக்களும் விழிப்போடு இருக்கவேண்டும்

## மருத்துவர் யமுனானந்தா அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

சீனாவைத் தாக்கி அங்கு பல மக்களின் உயிரைக் குடித்து வரும் கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்கா, தாய்லாந்து, சவுதி உள்ளிட்ட நாடுகளுக்கும் பரவியுள்ளது. எனவே வடக்கு மாகாணத்திலும் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு விழிப்போடு இருக்க வேண்டும்." என மருத்துவர் சி.யமுனானந்தா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது உலகம் முழுவதும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் கொரோனா வைரஸ் என்ற சுவாசத் தொற்று நோய் ஏற்பட்டுள்ளது. இந்தக் காய்ச்சல் சீனாவில் பரவுகின்றது.

இந்தக் கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவும் அபாயம் உள்ளதால் உலக சுகாதார நிறுவனம் மிகவும் விழிப்பாக உள்ளது. இன்னும் அபாயக் கட்டத்தை எட்டவில்லை.

பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல் என்பது போல் இந்தத் தொற்றை பாம்புக் காய்ச்சல் என நாம் கூறலாம். நாக பாம்பிலிருந்து இந்த வைரஸ் மனிதனுக்கு சுவாசம் ஊடாகப் பரவி தற்போது விகாரமடைந்து வேகமாகத் தொற்றிவருகிறது.

சீனாவில் இந்த வைரஸ் காரணமாக ஓர் மாகாணத்தைச் சேர்ந்த மக்களை வேறு மாகாணங்களுக்குச் செல்லாதவாறு கட்டுப்பாடுகளைப் போட்டுள்ளனர்.

இந்தத் தொற்று நோயின் அறிகுறிகளாக சாதாரண தடிமன், தொண்டை நோ மற்றும் இருமல் இருக்கின்றன. இந்த தொற்றுக்குள்ளாகியவர்கள் சுவாசப் பாதிப்பு ஏற்பட்டு 10 பேரில் நால்வர் இறக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொற்றுக்கு மருந்துகள் இல்லை. அதனால கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். சீனாவில் மக்கள் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

தற்போது இந்த நோய்த் தொற்று அமெரிக்கா, சவுதி அரேபியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நோய்த் தொற்று இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம். எனவே சுகாதார அதிகாரிகள், சிவில் அதிகாரிகள், பொதுமக்கள் போதிய விழிப்போடு இருக்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டால் வைத்தியசாலைகள் முடங்கும் நிலை ஏற்படலாம். எனவே மயிலிட்டியிலுள்ள காசநோய் வைத்திய சாலையை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் சீரமைத்து வழங்கினால், அவசர நிலையை சமாளிக்க முடியும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மூன்று மருத்துவ நிபுணர்கள் உள்ளனர். இந்தத் தொற்றுத் தொடர்பில் விழிப்போடு செயற்படுவதை நாம் தற்போதே முன்னெடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இனந்தெரியாத நபர்களால் வீட்டு ஜன்னல் உடைப்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கில் இனந்தெரியாத நபர்களால் வீட்டு ஜன்னல் ஒன்று உடைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம்இரவு வேளையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் கிராம உத்தியோகத்தரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது. (இ-60)

# நாயால் நால்வர் படுகாயம்

(கரணவாய்)

நாயுடன் மோதுண்டு மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளாக பின்னால் வந்த மோட்டார் சைக்கிள்கள் அதனுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதியிலுள்ள வல்லைச் சந்தையில் இவ்விபத்து இடம் பெற்றது.

வீதியால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வல்லைச் சந்திப்பகுதியில் நாயுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. அப்போது அவ்வீதியால் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 60 செவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L, Land Officer<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/ 7044 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி, முன்பள்ளி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், விவாகரத்தும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/7126 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Civil Engineer, UK<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/ 7049 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 64 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/ 7131 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 7<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் A/L, தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/ 7051 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 55 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MA, M.phill, Lecturer<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/7172 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி செவ் 12 இல்<br>உயரம்: 176cm<br>தகைமை/தொழில்: B.Sc MDP, MBA, உதவிப் பதிவாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வங்கி<br>தொ.இ: B/7062 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 48 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: Diploma, தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் சொந்த தொழில்<br>தொ.இ: G/7188 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# குடியிருப்புக்கு மத்தியில் குப்பைமேடு

## மக்கள் மீது கரிசனை காட்டுமா மாநகரசபை





(யாழ்ப்பாணம்)

குருநகர் மத்திய மேற்கு வீதியில் கருவாடு பதனிடுவதற்கு அமைக்கப்பட்ட கடற்கரையோரமாகவும் புதிதாக அமைக்கப்பட்ட வீதியோரமாகவும் மக்கள் குடியிருப்புக்கள் மத்தியில் குப்பை மேடாகவுள்ளது.

வீட்டுக் கழிவுகள், வெற்றுப் பேணிகள், போத்தல்கள், துர் நாற்றம் வீசும் கழிவுப்பொருட்கள் யாவும் நிறைந்து காணப்படுகின்றன.

இதனால் டெங்கு நோய் பரப்பும் நுளம்பு பெருகும் அபாயம் காணப்படுகிறது.

இது தொடர்பாக யாழ். மாநகர முதல்வர், ஆணையாளர் ஆகியோருக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் கவலையுடன் சுட்டிக் காட்டினர். (இ-106)

## ஐ.தே.கவுக்குள் தலைமைத்துவப் பிரச்சினை

# பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டி தமிழ் முற்போக்கு கூட்டணி ஆராய்வு

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு




(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் ஆராயவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள தலைமைத்துவப் பிரச்சினை காரணமாகவே இவ்வாறு மாற்றுத் தீர்மானம் எடுக்கலாமா? என்று சிந்தித்ததாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (இ-7)

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2020- 12.02.2020



விகாரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசி நாதன் குரு இராசியிலேயே இருக்கிறார். தன ஸ்தானம் மற்றும் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி அவரோடு இணைந்திருக்கிறார். அதேநேரம் விரயாதிபதி செவ்வாய் விரய ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடும். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். பொறுமையும் நிதானமும் உங்களுக்கு அதிகம் தேவை. ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் மனக்கலக்கங்கள் அதிகரிக்கலாம். பரிசீலனை செய்யாமல் செய்த காரியங்களால் பலவிதமான இடையூறுகள் உருவாகும்.

விரய ஸ்தானத்தில் செவ்வாய் பலம் பெற்றிருப்பது அவ்வளவு நல்லதல்ல. சொத்துக்களாலும் சொந்தங்களாலும் சில பிரச்சினைகள் உருவாகும். வாங்கிய சொத்துக்களில் வில்லங்கங்கள் ஏற்படலாம். அல்லது வழக்குகள் வரலாம். 6 இற்கு அதிபதியான சுக்கிரன் 3 இல் இருக்கிறார்.

ருண, ரோக, சத்ரு ஸ்தானாதிபதியான சுக்கிரன் உங்கள் இராசிநாதன் குருவிற்கு பகைக் கிரகமாக விளங்குபவர். அவர் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. மேலும் அவரை மனதுகாரகன் சந்திரன் பார்க்கிறார். எனவே எதிர்மறைச் சிந்தனைகள் ஏராளமாகத் தோன்றும். அவற்றை மாற்றிக்கொள்வது உங்களது புத்திசாலித்தனமாகும். நேர்மறைச் சிந்தனைகளை அதிகரித்துக் கொண்டால் நடைபெறும் காரியங்கள் நல்லவிதமாக நடைபெறும். பெண் வழிப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். அதிகாரிகளால் தொல்லையும் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகளும் நம்பிக்கைக்குரிய நண்பர்களால் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு திசாபுத்தி பலம் இழந்திருந்தால் புகழுக்கு களங்கம் வரலாம். ஜென்ம கேதுவும் 7 இல் ராகுவும் இருப்பதால் சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் இருக்கிறீர்கள். எனவே அதற்குரிய பிரீதிகளை செய்து கொள்வது நல்லது.

இம்மாதம் தை அமாவாசை அன்று முன்னோர்களை திருப்திகரமாக நினைத்து வழிபடுவதன் மூலம் முயற்சிகளில் ஏற்பட்ட தடை அகலும். மேலும் தைப்பூசத் திருநாளில் விரதமிருந்து முருகப்பெருமானை தரிசிப்பது நல்லது. ஜென்ம குருவின் ஆதிக்கம் இருப்பதால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் விரதமிருந்து குருபகவானை வழிபடுங்கள்.

### கும்ப புதன் சஞ்சாரம்

ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவராக

## நேர்மறை சிந்தனை தேவை

இருந்தாலும் சுக்கிரனோடு இணையும் பொழுது ஒருசில நன்மைகளையும் செய்வார். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியானவர் புதன். எனவே வாழ்க்கைத் துணையின் வேலை சம்பந்தமாக ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டுப் பயணத்தில் இருந்த இடையூறுகள் அகலும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

உடன் பிறப்புகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். ஊர் மாற்றம், இடமாற்றம், நாடுமாற்றம் போன்றவை உருவாகலாம்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எதிரிகள் ஸ்தானாதிபதி வலுவடையும் பொழுது, கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டியது அவசியம். அதேநேரம்




குருபகவானும் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். அதன் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால் எதையும் சமாளிக்கும் திறன் உங்களுக்கு வந்து சேரும். சுக்கிர பலத்தால் எதிரிகளின் பலம் கூடினாலும் அதை அடக்கும் ஆற்றலும் நண்பர்களின் ஒத்துழைப்பும் உங்களுக்குக் கிடைக்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் தாய்நாடு திரும்பும் சூழல் உருவாகலாம். ஆடை - ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளும் உருவாகும்.

### தனுசுச் செவ்வாய் சஞ்சாரம்

பெப்ரவரி 9 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அப்போது அங்குள்ள குருவோடு இணைந்து குரு-மங்கள யோகத்தை உருவாக்குகிறார். எனவே இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பு உண்டு. சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்திணைவர். இடம், பூமியாலும் இலாபம் கிடைக்கும். இக்காலத்தில் பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமாக ஏதேனும் பஞ்சாயத்துக்கள் நடைபெற்றால் அது உங்களுக்கு சாதகமாக அமையும்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருபகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது அவசியம். ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். விரயாதிபதி செவ்வாய் பலம்பெற்றிருப்பதால், விரயங்கள் கூடுதலாக இருக்கும். பணப்பற்றாக்குறை ஏற்படலாம். கோபத்தைக் குறைத்துக்கொண்டு செயற்படுங்கள். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்பட, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். குடும்பத் தகவல்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம்.

பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்களிடம் மனம் புண்படாத வகையில் நடந்து கொள்ளுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் பிறருக்குப் பொறுப்புச் சொல்லும்பொழுது, யோசித்துச் சொல்லுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு சக ஊழியர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். உடன் பிறப்புகளின் பகையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். வியாழன் விரதமும், குருவழிபாடும் முன்னேற்றத்திற்கு வித்திடும்.



விகாரி வருட தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் இருக்கிறார். அவரோடு குருவும் கேதுவும் இணைந்திருக்கிறார்கள். எனவே பயணங்களும் பணத்தேவைகளும் அதிகரிக்கும். 'நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். நேசித்தவர்களோடு கூட யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும்.

அஷ்டமாதிபதி சூரியன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் உணர்ச்சிவசப்படுவதை தவிர்ப்பது நல்லது. வீண் பழிகளுக்குக்கூட ஒருசிலர் ஆளாக நேரிடும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாவது கடினம். வருமானம் ஒருபுறம் வந்தாலும் செலவு பல மடங்கு ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். பற்றாக்குறையின் காரணமாக பக்கத்தில் இருப்பவர்களிடம் கூட ஒருசிலர் கைமாற்று வாங்க நேரிடும். திட்டமிட்டுச் செலவு செய்வதே நல்லது. யாரிடம் பேசினாலும் அதிகாரத்துடன் பேசாமல் அன்பாகப் பேசினால் தான் காரியங்களை சாதித்துக் கொள்ள இயலும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருங்கள். பிறருக்குப் பொறுப்பு சொல்லி பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டாம்.

விரோதங்கள் தானாக வந்து சேரும். அரசியலில் உள்ளவர்களுக்கு சோதனையான நேரம் இது. கணக்கு வழக்குகளை கச்சிதமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனோ, தானோ என்று எதையும் செய்யாமல் எதிலும் அதிக கவனம் செலுத்தி செயற்பட்டால்தான் உங்கள் மீது பழி வராமல் இருக்கும். பெண்கள் விடயத்தில் மிகுந்த கவனத்தோடு செயற்படுங்கள்.

6 இல் ராகு இருப்பது நன்மைதான் என்றாலும், 6 இற்கு அதிபதி புதன் உங்கள் இராசியில் அல்லவா சஞ்சரிக்கிறார். எனவே எதிர்ப்புகளுக்கு மத்தியில் உங்கள் வாழ்க்கைப் பாதை செல்லும். மறைமுகப் பகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சக பணியாளர்களால் தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். 'வரவேண்டிய பதவி உயர்வு தாமதப்படுகின்றதே' என்று கவலைப்படுவீர்கள். மேலதிகாரிகள் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கொடுக்கமாட்டார்கள். விருச்சிகச் செவ்வாயின் சஞ்சாரத்தால் சொத்து விற்பனையில் இலாபம் கிடைக்கலாம். பூர்வீக சொத்து பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். புதிய சொத்து வாங்கும் வாய்ப்பு ஒருசிலருக்கு உண்டு.

## விரயங்கள் அதிகரிக்கும் நேரம்

ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடக்கிறது. அதிலும் குறிப்பாக விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. எனவே சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும் சனிபகவானையும் அனுமானையும் தொடர்ந்து வழிபட்டு வருவது நல்லது. தைப்பூசத்தன்று முருகப்பெருமானை வழிபட்டால் உங்கள் முயற்சி வெற்றியாகும்.

### கும்ப புதன் சஞ்சாரம்

ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத- சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். எனவே உத்தியோகத்திற்கான நல்ல தகவல் வந்து சேரும். வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் கூட ஒரு சிலருக்குத் தானாக வரலாம். என்ன இருந்தாலும் குடும்பச்சுமை கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். நகை வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். அடகு வைத்த பொருளை மீட்கும் வாய்ப்பு ஒருசிலருக்கு வாய்க்கும்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். அங்கு சுக்கிரன் உச்சம்




பெறுகிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதி உச்சம் பெறுவ்து யோகம்தான். இக்காலத்தில் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் பெருகும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். அவர்கள் வெளிநாடு சென்று பணிபுரிய நினைத்தால், அதற்குரிய ஏற்பாடுகளை செய்து கொடுப்பீர்கள். ஒருசிலருக்கு வெளிநாட்டு யோகம் அமையலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களின் அனுகூலத்தோடு நல்ல காரியங்கள் பலவும் செய்யும் நேரம் இது.

### தனுசு செவ்வாய் சஞ்சாரம்

செவ்வாய் உங்கள் இராசிக்கு 4, 11 இற்கு அதிபதியானவர். சுகஸ்தானம் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான இவர், மாதத் தொடக்கத்தில் லாப ஸ்தானத்தில் வீற்றிருக்கின்றார். பெப்ரவரி 9 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார்.

எனவே சகோதர ஒற்றுமை பலப்படும். தக்க விதத்தில் பூமி வாங்கும் யோகமும் வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சியில் அனுகூலமும் உண்டு. இந்த நேரத்தில் எதைத் தொட்டாலும் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

இம்மாதம் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனிகவசம் பாடி சனிபகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். நீங்கள் பிறருக்கு நன்மை செய்தாலும் கூட அது தீமையாகவே தெரியும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமும் அன்பு காட்டி அரவணைத்துச் செல்வதன் மூலமும் ஒற்றுமை பலப்படும். தாயும் உடன் பிறப்புகளும் தள்ளி இருக்கவே நினைப்பர். சகோதர பாசம் குறையும்.

பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைப்பது அரிதாகும். நூதனப் பொருட்களை வாங்குவதில் ஒரு சிலர் ஏற்றங்களை சந்திப்பார்கள். பொதுவாகவே இம்மாதம் கேது உங்கள் இராசியில் இருப்பதால் தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கத்தான் செய்யும். தட்டுப்பாடுகள் அகல வழிபாடுகள் உங்களுக்கு கைகொடுக்கும்.

(தொடரும்)


## "நான் உங்களுடனே தான் இருப்பேன்"

# இனப்பிரச்சினைக்கான பேச்சானாலும் சர்வதேச மத்தியஸ்தம் வேண்டும்

## நிலைப்பாட்டில் மாற்றமில்லை-நீதியரசர் விக்னேஸ்வரன்

❖ தம்பி உருவாக்கிய கூட்டு தவறான தலைமைகளின் கையில்; சுயநலம் தலைவிரித்தாடும்!

❖ கூட்டமைப்பின் தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும் என்று கூறினேன் ஆனால் அத்தலைமைத்துவத்தை எனக்குத்தாருங்கள் என்று கூறவில்லை



(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும் என்று நான் கூறினேனே தவிர அத்தலைமைத்துவத்தை எனக்குத் தாருங்கள் என்று எப்போதுமே கூறவில்லை எனத் தெரிவித்த வடக்குமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையாக இருந்தாலும் சர்வதேச மத்தியஸ்தம் இருக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் எனவும் தெரிவித்தார். தமிழ் மக்கள் கூட்டணியின் அங்கத்தவர் ஒருவர் என்னுடன் கலந்துரையாடியவற்றை இவ் வாரத்திற்கொரு கேள்வியாக தருகின்றேன்.

**கேள்வி:-** நாங்கள் உங்களை சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் மாவைக்கும் ஒரு மாற்றுத் தலைவராக நினைத்திருக்கும் போது நீங்கள் எப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மாற்றப்பட்டால் அக்கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் பயணிப்பதை பரிசீலிக்கமுடியும் என்று கூறலாம்? போதாக்குறைக்கு செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் இதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறியுள்ளார்கள். எங்களை எல்லாம் விட்டுச் செல்ல துணிந்து விட்டீர்களா?

**பதில்:-** இல்லை. நான் உங்களுடனேதான் இருப்பேன். நீங்கள் என்னுடனே தான் இருப்பீர்கள். பல விடயங்களை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

1. சம்பந்தன், சுமந்திரன், மாவை போன்றவர்கள் தமது தலைமைத்துவத்தை விட்டுக் கொடுக்க முன்வருவார்களா? அதைமுதலில் சிந்தியுங்கள்.

2. கூட்டமைப்பின் அடுத்த தலைவர் தானே என்ற முறையில் சுமந்திரன் காய்களை உருட்டிக் கொண்டிருப்பதை நீங்கள் அறியமாட்டீர்களா? அவர் தமது கனவுகளைச் சிதைக்க ஒத்துக் கொள்வாரா? SJV (தந்தை செல்வா)வுக்கும் அவருக்கும் இடையில் குண அளவில் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேற்றுமை இருப்பினும் அடுத்த SJV தானே என்று முழுமையாக நம்புகின்ற அவர் எவ்வாறு தலைமைத்துவத்தை விட்டுக் கொடுப்பார்?

3. அவர் மாவையையும் சம்பந்தனையும் இன்னும் பலரையும் ஓரங்கட்டி தலைமைத்துவத்தைத் தானே பெறமுயல்கின்றார் என்பதை அறியமாட்டீர்களா?

4. "எங்கள் கட்சியையே தேசியத் தலைவர் அடையாளம் காட்டினார் நாங்களே உண்மையான வாரிசுகள்" என்று தேர்தலின் போது ஆனல்டும், சயந்தனும் சுமந்திரனுடன் சேர்ந்து மார்தட்டப்போவதை உங்களால் யூகிக்க முடியாதிருக்கின்றதா?

5. சென்றமுறை நடந்த தேர்தலில் நேர்ந்த அதே தவறுகள் மேலும் இன்னும் பெரிய விதத்தில் இம்முறை நடைபெறாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ரணில் இல்லாவிட்டால் சிலரால் இயங்க முடியாது என்று எண்ணுகின்றீர்களா?

தம்பி (பிரபாகரன்) தொடக்கி விட்ட கூட்டு தவறான தலைவர்களின் கைகளுக்கு மாறி விட்டால் என்ன நடக்கும்? கொள்கைகள் பறிபோவன. சுயநலம் தலைவிரித்தாடும்.

மக்கள் தம்பியின் பெயரைக் கேட்டு மயங்கி தம்பி தொடக்கிய பழைய கட்சியான த.தே.கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள். பதவிக்கு வந்ததும் இவ்வாறானவர்கள் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு விட்டு பொருளாதார விருத்தி பற்றிப் பேசுவார்கள். இதுவரை எமது 15 பாராளுமன்ற அங்கத்தவர்கள் மக்கள் பிரச்சினைகளை மறந்தது போல் தமிழ் மக்களின் எதிர்காலத்தை கஞ்சிப் பானைக்கு காலப்போக்கில் விற்று விடுவார்கள்.

பொதுமன்னிப்பு எமது சிறைக் கைதிகளுக்கு அளிக்காவிட்டால் ரணிலுடன் சேர்ந்து பயணிக்க மாட்டோம் என்று ஒருமுறை கூறியிருந்தால் அவர்கள் விடுதலை அடைந்திருப்பார்கள். எமது மக்கள் (முக்கியமாக என் வயதினர் அல்லது வயதில் மூத்தவர்கள்) த.தே.கூட்டமைப்புடன் ஒரு உணர்வுபூர்வமான உறவை இதுகாறும் வைத்திருந்து வந்துள்ளார்கள். அந்தப் பலவீனத்தைப் பாவிப்பார்கள் எமது விண்ணாதி விண்ணர்கள்! மக்கள் சார்பான கொள்கைகளை மலையேற்றி விட்டு மத்தியின் மதியூகிகளாக மாறி விடுவார்கள் எமது புதிய தலைவர்கள். "பாருங்கள்! ஆலைகளைத் தந்தோம். பாதைகளைத் தந்தோம், பல் தொழில்கள் செழிக்கச் செய்தோம்! வேறு என்ன வேண்டியிருக்கின்றது?" என்று பல்லவி பாடத் தொடங்கி விடுவார்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில் வடக்கு-கிழக்கை இணைக்க முடியாது: சமஷ்டி கிடையாது: எமது தேசியம் வெறும் கூக்குரலேயன்றி இறைமையை வேண்டுவது முட்டாள்தனம். ஒற்றையாட்சிக்குள் கிடைப்பதை சுருட்டிக் கொள்வோம். நாம் பதவியில் இருக்கும் அரசாங்கத்துடன் சேர்ந்து எமது தனிப்பட்ட நலன்களையும் பெற்று பொருளாதார சலுகைகளையும் பெற்றுக்கொடுப்போம் என்ற மனோநிலையிலேயே பயணஞ் செய்வார்கள்.

கொள்கைப் பற்றுறுதியுடன் இருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத்தான் அதன் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் இன்று இந்த கேவலமான நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

அதற்குத்தானே மாற்றுத் தலைமை வேண்டுகின்றோம் என்பது உங்கள் வாதம். ஆனால் நடக்கப்போவது என்ன? மக்கள் குழம்பி விடப் போகின்றார்கள். பல்முனைப் போட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கூடிய வாக்குகளைப் பெறும் என்று எதிர்பார்க்கலாம். பொருத்தமற்ற, தமிழ் இதயத்தைப் புரிந்து கொள்ளாத தலைவர்கள், சுயநலமே வாழ்க்கை என்ற கொள்கையுடைய தமிழ்த் தலைமைகளே தமிழர்களின் வருங்காலத்தைத் தீர்மானிப்பார்கள். எமது கோரிக்கைகள் அனைத்தும் கானல் நீராகி விடும்.

மாற்றணிக்குள் ஒற்றுமை ஏற்பட்டால் நிலைமை சீராகுமல்லவா என்று நீங்கள் கேட்பீர்கள். ஆனால் எல்லாக் கட்சிகளிலும் நாம் காண்பது என்ன? எவ்வகையிலேனும் தமது கட்சியைப் பலப்படுத்த வேண்டும். தாங்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட வேண்டும். அதிகாரம் தமது கைகளுக்கு வரவேண்டும். பாராளுமன்ற அங்கத்துவத்தின் நன்மைகளை ஐந்து வருடங்களுக்கேனும் சுகிக்க வேண்டும் என்றே எண்ணுகின்றார்கள். ஆணவத்தையும் சுயநலத்தையும் தான் எல்லோரிடத்திலும் காண்கின்றேன்.

மக்களைப் பற்றிய கரிசனையை நான் அவர்களிடம் காணவில்லை. ஒருவருக்கொருவர் தமது அறிவுக் கூர்மையை வெளிக்காட்டி மற்றவர்களுக்கு எதிராக புள்ளிகள் பெறவே முயல்கின்றார்கள். ஒருவருக்கொருவர் மற்றவர்களின் தனிப்பட்ட வாழ்வின் தவறுகளைச் சுட்டிக்காட்டி சந்தி சிரிக்க வைக்கின்றார்கள். இணையத்தில் சிலவற்றை ஓட விடுகின்றார்கள்.

ஒவ்வொருவரும் தான் நல்லொழுக்கத்தின் சிறந்த எடுத்துக்காட்டு என்றும் மற்றவர்கள் கேவலமானவர்கள் என்றும் உலகத்திற்கு எடுத்துக்காட்ட முயல்கின்றார்கள். அதுவும் சட்டத்தரணிகள் தமது புத்திக் கூர்மையொன்றே தமிழர்களுக்கு விடிவு காலத்தைதரும் என்று எண்ணுகின்றார்கள். சேர்.பொன்னம்பலம் இராமநாதன் தொடக்கம் இன்று வரை தமிழர் தலைவர்கள் சட்டத்தரணிகளாகவே இருந்து வந்துள்ளனர். அவர்கள் மக்களை ஒன்று சேர்த்து ஒரு குடைக்கீழ் பிரயாணம் செய்ய விடுவார்களோ என்பது சந்தேகமே. அரசியல் பேச்சுக்களுக்கு எங்கள் மக்கள் எடுபடுகின்றார்கள்: அரசியல்வாதிகள் தரும் "சம்திங்"க்கு எடுபடுகின்றார்கள். வெகுவிரைவில் இலங்கை பூராகவும் தமிழ் பேசும் மக்களுக்கு வரவிருக்கும் கெடுதிகளை இவர்கள் உணர்கின்றார்கள் இல்லை.

இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடென்று உருமாற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கண்டும் காணாதது போல் எமது அரசியல்வாதிகள் நடமாடுவது எமக்கு வேதனையை அளிக்கின்றது. எம்முள் இருக்கும் முரண்பாடுகளை, ஒற்றுமையின்மையை இதுவரை மத்திய அரசாங்கங்கள் தமக்குச் சார்பாக பயன்படுத்தி வந்துள்ளன.

உதாரணமாகப் பார்த்தால் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையென்றால் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தாமாகத் தனித்தே மத்திய அரசாங்கத்துடன் பேசுகின்றார்கள். மற்றவர்களைப் பங்குகொள்ள விடுவதில்லை. சில நேரங்களில் மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறுவார்கள். இந்தத் தெரியாதவர்களை தேர்ந்தெடுப்பதும் இவர்கள்தான். தம்முடன் முரண்படாமல் செல்லக்கூடியவர்களைத் தேர்ந்தெடுத்து விட்டு அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று கூறுவது தம்மை அதிகாரத்தில் வைத்துக்கொள்ளவே.

அதிகாரத்தைத் தம் கைகளுள் வைத்திருக்க வேண்டும் என்ற இவர்களின் பலவீனத்தை வைத்து மத்திய அரசாங்கம் இவர்களை தம்வசப்படுத்துகின்றது. எனவே "இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையாக இருந்தாலும் சர்வதேச மத்தியஸ்தம் இருக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்."

எது எவ்வாறெனினும் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும் என்று நான் கூறினேனே ஒழிய அத்தலைமைத்துவத்தை எனக்குத் தாருங்கள் என்று எப்போதுமே கூறவில்லை. வைத்திய கலாநிதி லஷ்மன் அல்லது வைத்திய கலாநிதி சிவன்சுதன் போன்றவர்கள் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டால் கட்டாயம் அவர்களுடன் கலந்தாலோசிக்க முடியும். அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் சேர்ந்து செல்ல முடியும். ஆனால் அவ்வாறானவர்கள் அரசியலுக்குவரத் தயங்குகின்றார்கள்.

சிலர் நான் மாற்று அரச தலைமைக்காக அலைகின்றேன் என்கின்றார்கள். மாற்று அரசியல் தலைமை எனக்குக் கிடைத்து நான் என்ன செய்யப்போகின்றேன்? எனக்கு வேண்டுவது ஒன்றே ஒன்று மட்டுமே! எமது தமிழ் மக்களின் வருங்காலம். அவர்கள் மாண்புடனும், மதிப்புடனும் வாழ வேண்டும். அவர்கள் ஒற்றுமைப்பட வேண்டும். அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும். அதுமேம்படவேண்டும். அதனை மனதில் வைத்தே நான் அவ்வாறு கூறினேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வவு. கண்ணாட்டி கிராம மக்களின்

## காணி அபகரிப்பை தடுத்து நிறுத்துமாறு வடமாகாண காணி ஆணையாளருக்கு மகஜர்

(நெளுக்குளம்)

வவுனியா கண்ணாட்டி கிராமத்திலிருந்து இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்ற 170 குடும்பங்களின் சுமார் 400 ஏக்கர் காணி தற்போது வேறு மாவட்டங்களிலுள்ளவர்களுக்கு காணி ஆவணங்கள் வழங்கப்பட்டு அக்காணியிலிருந்து கிரவல் அகழ்வுப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் கிரவல் அகழ்வுப்பணிகள் மற்றும் காணியின் அபரிப்புக்களை உடன் தடுத்து நிறுத்துமாறு கோரி வடமாகாண மக்கள் திட்ட ஒன்றியத்தினால் வடமாகாண காணி ஆணையாளருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் மேலும் தெரிவிக்கையில், வவுனியா கண்ணாட்டி -தம்பனை வீதி, கண்ணாட்டி கிராமம் 207 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 1977 ஆம் ஆண்டு 170 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

அங்கிருந்த குடும்பங்கள் அனைத்தும் கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து இந்தியாவிற்கு அகதிகளாக தஞ்சமடைந்தனர்.

மேற்குறித்த குடும்பங்களில் சிலர் யுத்தம் முடிவுற்ற காலத்தில் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர். பெருமளவானோர் இன்றுவரை இலங்கைக்குத் திரும்ப வசதிகள் இன்றி அவதியுறுகின்றனர்.

இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கும் குடும்பங்களின் காணிகளை அபகரித்து குறித்த கிராமத்துடன் தொடர்பில்லாதவர்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் இரகசியமான முறையில் வழங்கியுள்ளனர்.

தற்போது அந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அதனைப்பயன்படுத்தி கிரவல் தோண்ட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மோசடிக்காரர்களுக்கு கிராம உத்தியோகத்தர் மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர்கள் ஆதரவாகச் செயற்படுகின்றனர். தயவு செய்து விரைவாக நடவடிக்கை எடுத்து குறித்த காணிகளில் கிரவல் அகழ்வுப்பணிகளை நிறுத்துமாறும் குறித்த காணிகளில் 1977 ஆம் ஆண்டிலிருந்து குடியிருந்தவர்கள் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பி குடியமரும் வரை அக்காணிகளில் எவ்விதமான வேலைகளையும் மேற்கொள்ளாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் இடம்பெயர்ந்து சென்று நாடு திரும்பிய இருவர்களின் ஆவணங்களும் இணைக்கப்பட்டு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (9-299)

# றிசாத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



(நெளுக்குளம்)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

சாளம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள குப்பை மேட்டு விவகாரத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவரது கருத்து மடத்தனமாக இருப்பதாக முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். குறித்த கருத்துக்கு கண்டனம் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பிரதேச சபைக்கு முன்பாக ஒன்றுகூடிய உறுப்பினர்கள் அமைச்சருக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (9-299)

வன்னி வலம்

# முல்லைத்தீவில் 6000 ஏக்கரில் நிலக்கடலை செய்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆண்டுதோறும் 6,000 ஏக்கரில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்துள்ளார்.

பெரும் போகத்தில் 3,200 ஏக்கரிலும் சிறு போகத்தில் 2,000 ஏக்கரிலும் இடைப் போகத்தில் 1,000 ஏக்கரிலும் நிலக்கடலைச் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. இலங்கைத் தீவிலே முல்லைத்தீவு மாவட்டத்தில் தான் நிலக்கடலைச் செய்கை கூடுதலாக இடம்பெறுகின்றது. விவசாயத் திணைக்களமும் நிலக்கடலைச் செய்கையில் ஈடுபடுகின்றவர்களை ஊக்குவித்து வருகின்றது.

உப உணவுப் பயிர்ச் செய்கைகளான கௌபி, பயறு, எள்ளு, நிலக்கடலை என்பவற்றில் விவசாயிகள் கூடுதலாக ஈடுபட வேண்டும். விவசாயத் திணைக்களத்தினால் நடமாடும் விதை விற்பனை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மல்லாவி விவசாயப் பயிற்சி நிலையத்திலும் புதுக்குடியிருப்பு விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்திலும் ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திலும் நல்லின விதைகளை உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை மாவட்டத்தில் குரங்குகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பத்து வாயு துப்பாக்கிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-350)

# சாளம்பைக்குளம் போராட்டத்திற்கு நீதிமன்றத்தால் தடை உத்தரவு

(நெளுக்குளம்)

வவுனியா மன்னார் வீதி புதிய சாளம்பைக்குளம் கிராமத்திற்கு அருகில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள, குப்பை மேட்டினை அகற்றும்படி பிரதேச மக்களால் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது.

இந்நிலையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தலைவரால் குறித்த விடயம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாடு தொடர்பான வழக்கு விசாரணை வவுனியா நீதவான் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த போராட்டம் மக்களினது அன்றாட கடமைகளிற்கும், பாதுகாப்பிற்கும் தடையாக இருப்பதாக நீதிமன்றிற்கு தெரிவதனால் அதில் பங்குபற்றியுள்ளவர்களை அந்த இடத்தை விட்டுச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்குமாறு பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரிக்கு நீதிமன்றம் உத்தரவு வழங்கியது.

குறித்த உத்தரவை பொலிஸ் பொறுப்பதிகாரி போராட்டக்காரர்களிற்கு காண்பித்து விடயம் தொடர்பில் தெரிவித்திருந்தார். இந்நிலையில் நீதிமன்ற உத்தரவை கருத்தில் கொண்டு போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

குறித்த போராட்டம் காரணமாக குப்பைகளை கொட்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாத வகையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதால் வவுனியா நகர சபை மற்றும் பிரதேசசபை கழிவகற்றும் வாகனங்கள் நகரில் குப்பைகளை அகற்றமுடியாத நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி வவுனியா ஏ-9 வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா மடுக்கந்த தேசிய பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி மடுக்கந்தையை சேர்ந்த சிங்கள மக்கள் ஒன்றிணைந்து வவுனியா கல்வித் திணைக்களத்தின் முன்பாக ஏ-9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை கல்வித் திணைக்களத்திற்கு முன்பாக ஒன்றிணைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் திடீரென ஏ-9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் தமது பாடசாலைக்கு உடனடியாக ஆசிரியர்களை நியமிக்கும் பட்சத்திலேயே அங்கிருந்து செல்வோம் என கோசங்களை எழுப்பினர். இதனால் ஏ-9 வீதியில் போக்குவரத்து தடை ஏற்பட்ட நிலையில் போக்குவரத்து பொலிஸார் மாற்று வழிகளினூடாக போக்குவரத்தை சீர்செய்திருந்தனர்.

இந் நிலையில் குறித்த பகுதிக்கு வருகை தந்த பொலிஸ் அதிகாரிகள் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணனை ஆர்ப்பாட்ட இடத்திற்கு அழைத்து வந்து அம்மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது வலயக்கல்விப் பணிப்பாளர் இரண்டு வாரத்தில் ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஆவன செய்வதாக தெரிவித்த நிலையில் அவர்கள் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

எனினும் எழுத்து மூலமாக தமக்கு உறுதிப்பாடு தர வேண்டும் என கேட்டதற்கு அமைய வலயக்கல்விப் பணிப்பாளரினால் எழுத்து மூலமாக இரண்டு வாரத்தில் தேசிய பாடசாலைக்கான ஆசிரியர்கள் நியமிப்பதாகவும் மற்றும் மாகாண பாடசாலைகளில் இருந்து தற்காலிகமாகவேனும் உயர்தர மாணவர்களின் நலன்கருதி ஆசிரியர்களை நியமிப்பதாக தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றிருந்தனர். (9-250-299)

# முல்லை.கடற்கரையில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்துமாறு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்கரையில் தொடர்கின்ற மணல் அகழ்வினைத் தடுத்து நிறுத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், பொலிஸார் விரைவாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சமாசத்தின் தலைவர் ஞானதீபன் அன்ரனி, முல்லைத்தீவு கடற்கரையின் உப்புமாவெளிக்கும் சிலாபத்தைக்கும் இடையில் நாள்தோறும் மணல் அகழ்வு நடைபெறுகின்றது.

டிப்பர்களில் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அண்மையில் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இத்தகவலைத் தெரிவித்திருந்தோம்.

ஆனால் மணல் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. தொடரும் மணல் அகழ்வினால் ஆழிப்பேரலை போன்ற இயற்கை இடர்கள் ஏற்படுகின்றபோது கடல் நீர் விரைவாக உட்புகுந்து கொள்வதற்கான அபாயம் உருவாகியுள்ளது.

மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்த வேண்டியது பொலிஸாரின் பொறுப்பாகவுள்ளது. பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தால் வீதிக்கு மணலுடன் வாகனங்கள் வந்தால் கைது செய்ய முடியாது என்று சொல்கின்றார்கள்.

ஆனால் நாம் மணல் அகழ்வு நடைபெறுகின்ற இடங்களையே தெரியப்படுத்து கின்றோம். பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (9-350)

### காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில்

# விடுதலைப்புலிகள்மீது பழிசுமத்துவதை வன்மையாக கண்டிக்கிறோம்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

**காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்துவதை வன்மையாக கண்டிப்பதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1052 ஆவது நாளாக தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பு ஒன்றினை நடத்தியிருந்தனர்.

அதன் போதே மேற்குறித்த கருத்தைத் தெரிவித்தனர். இது தொடர்பாக சங்க தலைவி ம.ஈஸ்வரி மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அறிக்கையில் காணாமல் ஆக்கப்பட்ட எந்த உறவுகளும் தன்னிடம் இல்லை என்பதையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவரின் இந்த கருத்திற்கு நாம் மறுப்பு தெரிவிக்கின்றோம். அவர் பாதுகாப்பு செயலாளராக போர்க் காலப்பகுதியில் இருந்த காலகட்டத்தில்தான் எமது உறவுகளை படையினரிடம் கையளித்தோம்,

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் விடுதலைப்புலிகள் மீது பழி சுமத்துவதை கண்டிக்கின்றோம். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறித்தான் எங்கள் பிள்ளைகளை படையினரிடம் ஒப்படைத்தோம். அவர் முற்றிலும் மாறான கருத்தினை வெளியிட்டுள்ளார். காணாமல் ஆக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வரலாறும் உள்ளது .

வெள்ளைக்கொடியுடன் வாங்கள்,உங்கள் பிள்ளைகளை ஒப்படையுங்கள் நாங்கள் விடுவிப்போம் என்று கூறிய படை அதிகாரிகள் தான் இன்றும் படைத்தளபதிகளாக இருக்கின்றார்கள் போர்க்காலத்திலும் இவர்கள் தான் இருந்தார்கள்.

ஜனாதிபதியின் மரணச் சான்றிதழுக்காகவா பத்து ஆண்டுகள் காத்திருந்தோம்? படையினரிடம் கையளித்த உறவுகளுக்கான நீதிவேண்டும், எங்களை குற்றவாளிகளாக்கி நாங்கள் மரண சான்றிதழை எடுக்கப் போவதில்லை.

ஜனாதிபதி சொல்லும் குற்றச்சாட்டினை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளக்கூடாது. காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் அவரிடம் இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தி இந்த தேடலை தேடிக்கொண்டிருக்கின்றோம். அந்த உறவுகளை இல்லாமல் போக செய்யாமல் எங்களுக்கான நீதி வேண்டும், எங்களுக்கான நீதி இலங்கையில் கிடைக்காது. எனவே குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என அறிவிக்க வேண்டும். அதுவரை நாங்கள் போராட்டத.தை கைவிடமாட்டோம் என மேலும் தெரிவித்தார். (9)

## முல்லை.கணேசபுரம் கிராமத்தில் வயல் விழா





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் கீழ் ஒட்டுசுட்டான் கணேசபுர விவசாய போதனாசிரியர் பிரிவில் 5 ஏக்கரில் நடைமுறைப்படுத்தப் பட்ட விதை நெல் உற்பத்தித் திட்டத்தின் வயல் விழா நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

2019ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் விவசாயத் திணைக்களத்தால் 2019/ 2020 பெரும்போகத்தில் விதை நெல் உற்பத்தித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்களத்தின் அலுவலர்கள் விவசாயப் போதனாசிரியர்கள், விவசாய சங்கத்தினர் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இத் திட்டங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் தரமான விதை நெல்கள் வருகின்ற சிறு போகத்தில் விவசாயிகளின் விதைத் தேவைகளிற்கு பெரிதும் உதவும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர். (9)

வன்னி வலம்

## விழிப்புணர்வு கருத்தமர்வு



(மன்னார் )

மாவட்ட ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற பெண்கள் அமைப்பு மற்றும் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் அங்கத்தவர்களுக்கு அரசியல் சமூக, பொருளாதார கலாசார உரிமைகள் தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வு நேற்று முன்தினம் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் தலைமையில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட காரியாலயத்தில் இடம்பெற்றது.

குறித்த செயலமர்வில் அண்மைக்கால அரசியல், சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் ஏற் பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாகவும் குறித்த விடயங்களில் தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு பிரஜைகளுக்கும் உள்ள உரிமைகள் தொடர் பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

குறித்த செயலமர்வின் வளவாளர்களாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் நிர் வாகச் செயலாளர் பிரதீப் வணிகசூரிய மற்றும் தேசிய மீன்வ ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைமைக் காரியாலய உறுப்பினர்களான பிரியங்கர கொஸ்தா மற்றும் பிரான்சிஸ் ராஜன் கலந்து கொண்டனர். (9-285)

## கிளிநொச்சியில் இரண்டாவது நாளாக தொடரும் உண்ணாவிரத போராட்டம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் மக்களிடம் அதிகரித்த வீதத்தில் அறவிடப்பட்டு வருகின்ற ஆதனவரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தார்.

இந்த நிலையில் உரிய தரப்பினர் குறித்த வர்த்தகரின் கோரிக்கைக்கு பதில் வழங்காத நிலையில் இரண்டாவது நாளாக தனது போராட்டத்தை தொடர்ந்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நபரின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு நேற்று மருத்துவ பரிசோதனை இடம்பெற்றது.

இந்த நிலையில் குறித்த நபர். உரிய பதில் கிடைக்கும் வரை தனது போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை என திடமாகத் தெரிவித்துள்ளார்.

இவரின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அதிகரித்த ஆதனவரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கிளிநொச்சி நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நேற்று முன்தினம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-271)



**முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கருவேலன்கண்டல் அ.த.க. பாடசாலையின் 2020 ஆம் ஆண்டுக்கான இல்லமெய்வன்மைப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்ந. சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டார். விளையாட்டுப் போட்டிற்கான பரிசில்களை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் த.அமலன் வழங்கியிருந்தார். (படம்-அ:க்கராயன் செய்தியாளர்)**

# பாரதம்

## 8 இயக்கங்களைச் சேர்ந்த 644 பயங்கரவாதிகள் சரண்



(டில்லி)

அசாம் மாநிலத்தில் தடை செய்யப்பட்ட 8 இயக்கங்களைச் சேர்ந்த 644 பயங்கரவாதிகள் பொலிஸில் சரணடைந்தனர்.

குறித்த பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அசாம் முதல்வர் சர்பானந்தா சோனோவால் முன்னிலையில் சரணடைந்தனர்.

இதற்காக இடம்பெற்ற நிகழ்வொன்றில் 177 பயங்கர ஆயுதங்களுடன் அவர்கள் சரண் அடைந்ததாகவும, அவர்களில் முக்கிய தலைவர்களும் உள்ளடங்குவதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அசாம் மாநிலத்தில், மாவோயிஸ்டு. போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி, ரப்ஹ தேசிய விடுதலை முன்னணி, கம்தாபூர் விடுதலை அமைப்பு, பெங்காலி தேசிய விடுதலை முன்னணி உள்ளிட்ட இயக்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த இயக்கங்களுக்கு அரசு தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## பாகிஸ்தானின் பேச்சுக்களில் விஷம்

### ஐ.நாவில் இந்தியா பகிரங்கக் குற்றச்சாட்டு



(நியூயோர்க்)

விஷத்தை கக்குவது போன்று வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சையே பேசுகிறதென ஐ.நா.சபை கூட்டத்தில் ஐ.நாவுக்கான இந்திய நிரந்தர துணைத் தூதுவர் கே.நாகராஜ் நாயுடு பாகிஸ்தான் மீது பகிரங்கமாக குற்றம் சுமத்தினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தில் இந்தியாவுக்கான நிரந்தர துணைத் தூதுவர் கே.நாகராஜ் நாயுடு கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"பாகிஸ்தான் போர்க்குணத்துக்கும் பழிவாங்கும் வழக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்து, சாதாரண உறவுகளை மீட்டெடுக்க வேண்டும்.

ஆனால் அதற்குப் பதிலாக அந்த நாடு, சர்வதேச சமூகங்களிடம் இருந்து உண்மையை மறைப்பதற்காக குழப்பத்தில் ஈடுபடுகிறது.

பாகிஸ்தான் தூதுக்குழு, வெறுப்பை ஏற்படுத்தும் கருத்துக்களையே தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

சிறுபான்மையினரை முற்றிலும் அழித்த ஒரு நாடு, தற்போது அவர்களைப் பாதுகாப்பது பற்றி பேசுவது மிகுந்த ஆச்சரியம் அளிக்கிறது.

பாகிஸ்தான் தனது தவறான சொல்லாட்சி கலையை கேட்க இங்கு எவரும் இல்லை என்பதை பிரதிபலிக்க வேண்டும். இயல்பான தூதரக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (2)

## கொரோனா வைரஸ் தாக்கம் போக்குவரத்துக்கள் நிறுத்தம்



(பீஜிங்)

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக சீனாவின் ஹுபே மாகாணத்தில் அனைத்துப் போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

ஹுபேயின் தலைநகரான 11 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட வுஹானிலேயே கொரோனா வைரஸ் முதன் முதலில் அடையாளம் காணப்பட்டது. அங்கு 25 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்த நகருக்கு உள்ளேயும் வெளியேயும் பேருந்து, ரயில் மற்றும் விமானப்போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

குறைந்தது நான்கு மாகாண நகரங்களில் போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டன. தேநீர் சாலைகள், திரையரங்குகள் மற்றும் கண்காட்சிகள் என்பன மூடப்பட்டுள்ளன.

தலைநகர் பீஜிங்கில் சீனப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டன. 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. மேலும் சிங்கப்பூர், சவுதி அரேபியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கும் வைரஸ் பரவியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)


## ரோஹிஞ்யர்கள் படுகொல

### தடுக்க நடவடிக்கை பே

### சர்வதேச நீதிமன்றம்

(பர்மா)

**மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் படு**
**அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொ**
**அந்நாட்டு அரசுக்கு உத்தரவிட்டது.**



மியன்மார் தலைவர். ஆங் சான் சூகி தொடர்ந்து மியன்மாரின் செயற்பாடுகளை நியாயப்படுத்தி வரும் நிலையில் சர்வதேச நீதிமன்றம் இத்தகைய உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ரோஹிஞ்யா முஸ்லிம்களின் போராளிக்குழு நடத்திய தாக்குதலையடுத்து மியன்மார் இராணுவத்தினர் ராகைன் மாகாணத்தில் நடத்திய இனப்படுகொலைத் தாக்குதல்களையே சர்வதேச நீதிமன்றம் தனது உத்தரவில் கண்டித்துள்ளது.

இராணுவத்தின் கடும் தாக்குதல்களால் சுமார் 8 இலட்சம் ரோஹிஞ்ய முஸ்லிம்கள் அயல்

## இராணுவ மு
## பயங்கரவாதிக

### ◆ 40 வீரர்கள்
### ◆ 80 பேர் படு

(டமாஸ்கஸ்).

சிரியாவில் இராணுவ முகாம்கள் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டும், குண்டுகளை வீசியும் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 40 இராணுவ வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிரியாவின் இட்லிப் மாகாணம் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்களிடம் இருந்து மாகாணத்தை மீட்க ரஷ்யப் படையின் உதவியுடன் சிரிய இராணுவம் கடுமையாகப் போராடி வருகிறது. இது ஒருபுறம் இருக்க அந்த மாகாணத்தில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் காலூன்றி தாக்குதல் நடத்தி வருகின்றன.



இந் நிலையில் நேற்று முன்தினம் இட்லிப் மாகாணத்தின் சமாகா மற்றும்

# ...கொலை செய்யப்படுவதை ...க மேற்கொள்ளுங்கள்

## ...ம் அரசுக்கு உத்தரவு

...கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க ...ற்கொள்ளுமாறு சர்வதேச நீதிமன்றம்



நாடான பங்களாதேஷிற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், ஆயுதக் குழு மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராகவே தமது இராணுவத்தினர் நடவடிக்கையை மேற்கொண்டதாக ஆங் சான் சூகி தனது வாதத்தை நீதிமன்றில் முன்வைத்தார். அத்துடன் இனப் படுகொலை இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே விசாரணையின் பின்னர் இனப் படுகொலை எனத் தெரிவித்து சர்வதேச நீதிமன்றம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ஐ-2)

# சீனாவை அச்சுறுத்தும் கொரோனா; உயிரிழப்பு 25 ஆக அதிகரிப்பு

## 830 பேர் பாதிப்பு



(பீஜிங்)
சீனாவில் தீவிரமாகப் பரவி வரும் கொரோனா வைரஸிற்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது.

அத்தோடு, பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் 830 ஆக அதிகரித்துள்ளது. மேலும், இதில் 24 பேர் ஹூபெய் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். 34 பேர் சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர்.

இதனை சர்வதேச சுகாதார அவசர நிலையாக அறிவிக்க வேண்டாம் என முடிவு செய்துள்ள உலக சுகாதார மையம், 10 நாட்களுக்குள் இதுபற்றி மீண்டும் கூடி ஆலோசிக்க உள்ளதாக தெரிவித்துள்ளது. அத்தோடு, தாம் வழங்கிய ஆலோசனைகள் உட்பட சீனாவில் ஏற்பட்டுள்ள நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம் என்றும் தெரிவித்துள்ளது. (ஐ-2)


# லிபியாவில் போர் நிறுத்தம் சீர்குலைவு; விமான நிலையத்தில் ஏவுகணைத் தாக்குதல்

(திரிபோலி)
உள்நாட்டுப் போர் இடம்பெற்றுவரும் லிபியாவில், உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென உலகநாடுகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்ற நிலையில், திரிபோலியிலுள்ள விமான நிலையத்தில் நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை போர் நிறுத்தத்தை சீர்குலைத்துள்ளது.

எண்ணெய் வளம் நிறைந்த வட ஆபிரிக்க நாடான லிபியாவில், நீண்டகாலமாக நிலவிவரும் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபை மற்றும் ரஷ்யா, ஜேர்மன், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன.

அத்தோடு, லிபியாவில், உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென ஐ.நா. பாதுகாப்பு சபை அண்மையில் வலியுறுத்தியது.

இந் நிலையில் லிபியாவில், தலைநகர் திரிபோலியிலுள்ள மிடிகா விமான நிலையத்தில் நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. 'கிராட்' ரகத்தைச் சேர்ந்த 6 ஏவுகணைகள் அந்த விமான நிலையத்தைக் குறிவைத்து வீசப்பட்டன.



இதனால், லிபியாவில், அமைதியை ஏற்படுத்துவதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டு வரும் முயற்சியில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

மோதலில் ஈடுபட்டு வந்த அரச படையினருக்கும், முன்னாள் இராணுவத் தளபதி காலிஃபா ஹஃப்தார் தலைமையிலான படையினருக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, 9 நாட்களுக்கு முன்னர்தான் அந்த விமான நிலையம் திறக்கப்பட்டது.

லிபியாவை 40 ஆண்டுகளுக்கு மேல் ஆண்டு வந்த அல்-கடாஃபியின் ஆட்சியை, அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் உதவியுடன் கிளர்ச்சிப் படையினர் கடந்த 2011 ஆம் ஆண்டு கவிழ்த்தனர்.

எனினும், அதற்குப் பிறகு அந்த நாட்டில் பல்வேறு ஆயுதக் குழுக்களும் தங்களுக்குள் தொடர்ந்து போரிட்டு வருகின்றன. (ஐ-2)

# ...முகாம் மீது ...திகள் தாக்குதல்

## ...ள் உயிரிழப்பு ...டுகாயம்



...ம் ...ம் ஹவாய்ன் நகரங்களில் உள்ள 2 இராணுவ முகாம்களை குறிவைத்து பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

400 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டும், குண்டுகளை வீசியும் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 40 இராணுவ வீரர்கள் பலியாகினர். 80 பேர் படுகாயம் அடைந்தனர்.

அதேசமயம் இராணுவ வீரர்கள் நடத்திய பதில் தாக்குதலில் 50 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர். மேலும் 90 பயங்கரவாதிகள் படுகாயம் அடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. (ஐ-2)

# கடல் நுரையில் மூழ்கிய ஸ்பெயின் நகரம்



(மாட்ரிட்)
ஸ்பெயின் நாட்டின் கேட்டலோனியா கடற்கரைப் பகுதியில் உள்ள நகரம் இடுப்பளவிற்கு கடல் நுரையால் சூழப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் அவதியடைந்தனர்.

ஸ்பெயின் நாட்டில் குளோரியா புயல் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 3 நாட்களாக அங்கு மழை, பனி, ஆலங்கட்டி மழை பெய்து வருகிறது. கடலோர பகுதிகளில் உள்ள நகரங்களில் சூறைக்காற்று சுழன்றடித்து வருகிறது.

இந்தப் புயல் காரணமாக இதுவரை 8 பேர் உயிரிழந்தனர், பலர் காணாமல் போய் உள்ளனர். வீடுகளும் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. 30 மாகாணங்களில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் கேட்டலோனியா பிராந்தியத்தில், கடற்கரையை ஒட்டியுள்ள டாசா டெல் மார் நகரில் சூறைக்காற்று காரணமாக வீதிகள் முழுவதும் கடல்நுரையால் சூழப்பட்டுள்ளது. மழை வெள்ளம் போன்று கடல் நுரை சூழ்ந்ததால், பொதுமக்கள் தெருவில் இறங்கி செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. கட்டடத்தின் சுவர்களில் பல மீற்றர் உயரத்திற்கு, சீமெந்துப் பூச்சு போன்று கடல் நுரை ஒட்டியுள்ளது.

கடல் சுற்றுச்சூழலில் ஏற்பட்ட மாற்றத்தினால் உருவாகும் இந்த நுரை, பொதுவாக பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# அரச ஊழியர், ஓய்வூதியக்காரர்கள் சம்பள அதிகரிப்பு இடை நிறுத்தம்

## அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரி முதலாம் திகதி முதல் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த சம்பள உயர்வு, ஓய்வூதியக்காரர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு மற்றும் நிறைவேற்று அதிகாரிகளுக்கான 15 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு ஆகியவை அமைச்சரவையின் தீர்மானத்துக்கிணங்க இடை நிறுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் மகிந்த சமரசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் தேர்தலை அண்மித்த காலத்திலேயே மேற்படி சம்பள அதிகரிப்புக்கான தீர்மானத்தை எடுத்ததாக குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் அதற்கான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் அமைச்சரவை அதனை இடை நிறுத்தியதாக தெளிவுபடுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற்கட்டளை 27/2 இன் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அநுரகுமார திஸநாயக்க

இந்த அரசாங்கத்தால் கடந்த டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை இந்த மாதம் 20 ஆம் திகதி அரசாங்கமே இடை நிறுத்தியது.

இதனால் இந்த ஜனவரி மாதம் தமது சம்பளம் அதிகரிக்கும் என்றும் தமது ஓய்வூதியம் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்த்த மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். அவர்களின் தலைமையில் தங்கி வாழும் குடும்பங்களும் பாதிப்படைந்துள்ளன.

தற்போதைய அரசாங்கமே கடந்த மாதம் அமைச்சரவையில் எடுத்த தீர்மானத்தை இந்த மாதம் 20 ஆம் திகதி இடை நிறுத்த தீர்மானித்தமை ஏற்க முடியாது எனத் தெரிவித்தார்.

### முன்னாள் பொது நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார

இந்த ஜனவரி மாதத்திலிருந்து அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 3 ஆயிரம் ரூபாய் முதல் 24 ஆயிரம் ரூபா வரை ஒவ்வொரு மட்டத்திலும் அதிகரிக்கச் செய்யவும் அத்துடன் நிறைவேற்று அதிகாரிகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கவும் எமது அரசாங்கம் தீர்மானித்திருந்தது. அதனை தற்போதைய அரசாங்கம் இடை நிறுத்தியுள்ளது. ஏற்கனவே இது தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்று நிரூபத்திற்கு இணங்க அதனை விரைவாகப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றார்.

### இராஜாங்க அமைச்சர் மகிந்த சமரசிங்க

ஜனாதிபதியால் இது தொடர்பில் ஆராய்ந்து சிபாரிசு செய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஒவ்வொரு சேவை பிரிவுக்கும் இணங்க சம்பள அளவு தயாரிக்கப்பட்டு வருகிறது. அதனையடுத்து அதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு சம்பள ஆணைக் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டது என அவர்மேலும்தெரிவித்தார் (இ-7)

## குடும்பத்திற்குள் குழப்பம்

# துப்பாக்கிச் சூட்டில் பெண் பலி!

## இருவர் காயம்

(கராடுகல)

கராடுகல, பிட்டகுமுற பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் உயிரிழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்திலே பெண் ஒருவர் உயிரிழந்ததோடு மற்றும் இருவர் காயமடைந்த நிலையில் விவில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குடும்பத்திற்குள் ஏற்பட்ட தகராறு முற்றியதன் காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரைக் கைது செய்யும் வகையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## ஷாருகானை இலக்கு வைத்து நடத்தப்பட்ட

# குண்டுத் தாக்குதல் குறித்து எனக்கு எதுவும் தெரியாது

## நாடாளுமன்றில் கம்மன்பில விளக்கம்

(கொழும்பு)

பிரபல இந்திய நடிகர் ஷாருகானை இலக்கு வைத்து இலங்கையில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் குறித்த இரகசியங்கள் எதுவும் எனக்குத் தெரியாது என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஷாருகான் இலங்கைக்கு வருகை தந்த வேளையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து எனக்கு எல்லா இரகசியங்களும் தெரியும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கூறினார்.

இவ்வாறு அவர் கூறியதையடுத்து ஷாருகானை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தியது நானென சிலர் நினைத்து விட்டனர்.

முகப்புத்தகத்தில் அவ்வாறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. ஆனால் ஷாருகானை இலக்கு வைத்து நடத்தியதாகக் கூறப்படும் குண்டுத் தாக்குதலில் சாதாரணமாக அனைவருக்கும் என்ன தெரியுமோ, காதுகளில் என்ன கதைகள் கேட்டதோ அது மட்டுமே எனக்கும் தெரியும். அதைத் தாண்டிய இரகசியங்கள் எதுவும் எனக்குத் தெரியாது" என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தலைவராகத் தகுதிகள்

என்னுடைய நண்பர் ஒருவர்...ஆழ்ந்த சிந்தனையிலே இருந்தார். என்ன யோசனை செய்கிறீர்கள்...என்று கேட்டேன். தலைவராக வேண்டும் என்று பார்க்கிறேன்...அதுதான் அதுக்கு என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்றார். நான் கூட அது மாதிரி யோசித்துப் பார்த்தேன்...அதுக்கு அப்புறம் யோசனையைக் கைவிட்டுவிட்டேன் என்றேன். ஏன் என்று கேட்டார். அதுக்கான தகுதிகள் எனக்கு இல்லை என்கிறது என்னைவிட மற்றவர்களுக்கு நல்லாப் புரிந்து போய்விட்டது...அதனாலே பேசாமல் கம் என்று இருந்து விட்டேன் என்றேன். தலைவர் ஆகிறதுக்கு தகுதிகள் வேறு உண்டோ? என்று கேட்டார். அவர் யதார்த்தமாகத்தான் கேட்டார். நான் உடனே என்னிடம் இருந்த ஒரு புத்தகத்தை எடுத்து அவரிடம் கொடுத்தேன் படித்துப் பாருங்கள் என்று.

தலைவர் ஆவதற்கு என்ன வழி என்பதைப் பற்றி அதிலே போட்டிருந்தார்கள்... முதல் வழி என்ன தெரியுமா?

ஒரு நான்கு பேர் முன்னால்...அல்லது ஒரு கூட்டத்திற்கு முன்னால் நீங்கள் பேசப் போகிறீர்கள்...அப்பொழுது எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்றால்...உண்மையான புகழ்ச்சி, நேர்மையான பாராட்டு இதோட ஆரம்பிக்க வேண்டும். எடுத்ததுமே அது சரியில்லை...இது சரியில்லை என்று பேசிக் கொண்டிருக்கக் கூடாது!

மக்களைப் பார்த்து...நீங்கள்தான் தப்பு செய்து விட்டீர்கள். என்று நேரடியாகச் சொல்லக் கூடாது. மக்களிடம் தவறு இருந்தாலும் அதை மறைமுகமாக...ஏதாவது கதை சொல்லி அதிலேயிருந்து அவர்கள் புரிந்து கொள்கிற மாதிரிச் செய்ய வேண்டும். அடுத்தவர்கள் செய்த தப்பு என்னென்ன என்று அலசுவதற்கு முன்னர் நீங்கள் செய்த தப்பு என்ன என்பதைப் பற்றி பேசுங்கள். எதுக்கும் நேரடியாக உத்தரவு போட்டுக் கொண்டிருக்காதீர்கள். இதை நீங்கள் செய்ய வேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக இதை நீங்கள் இப்படிச் செய்தால் எப்படியிருக்கும்? என்று கேள்வி மாதிரிக் கேட்க வேண்டும். உத்தரவு மாதிரி தோன்றாது. அடுத்தவர்கள் மரியாதையைக் காப்பாற்றுகிற மாதிரிப் பேச வேண்டும். உங்க பேச்சு இன்னொருவரை அவமானப்படுத்துகிற மாதிரி இருக்கக் கூடாது. ஏன்டா அவர்களிடம் போய் மாட்டினோம் என்று யாரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு சின்ன வளர்ச்சியையும் பாராட்ட வேண்டும். வெற்றி சாதாரணமாக இருந்தாலும் பாராட்டாமல் இருந்துவிடக் கூடாது.

பாராட்டும் போது தாராளமாக இருக்கலாம்...குறை சொல்லும் போது கவனமாக இருங்கள். வாய்க்கு வந்தபடி பேசிவிட்டால் அப்புறம் வகையாக மாட்டிக் கொண்டு முழிக்க வேண்டியிருக்கும்.

நீங்கள் பேசுவது இன்னொருவருக்கு ஒரு கௌரவத்தையும் மரியாதையையும் உண்டு செய்வது மாதிரி இருக்க வேண்டும். நீங்கள் பேசுவது ஒருவருடைய கொஞ்ச நஞ்ச மரியாதையையும் எடுத்து விடுகிற மாதிரி இருக்கக் கூடாது. உங்க பேச்சைக் கேட்டால் கேட்கிறவர்களுக்கு ஒரு ஊக்கம் வர வேண்டும். உற்சாகம் வர வேண்டும். தவறு எதுவாக இருந்தாலும் அதைச் சுலபமாகத் திருத்திக் கொள்ளலாம். சரி செய்து கொள்ளலாம் என்பது மாதிரி இருக்க வேண்டும் உங்க பேச்சு.

அடுத்தவர்களை சந்தோசப்படுத்துங்க...உங்க யோசனையைக் கேட்டு நடக்கிறதனாலே அந்த சந்தோசம் அவங்களுக்குக் கிடைக்க வேண்டும். இந்தக் தகுதியெல்லாம் உங்களிடம் இருந்தால் நீங்கள் ஒரு சிறந்த தலைவன் ஆகலாம் என்று இந்தப் புத்தகத்திலே போட்டிருக்கு.

இந்தக் காலத்திலே தலைவர் ஆகிறதுக்கு வேறு சில தகுதிகளெல்லாம் தேவைப்படுகிறது. ஒரு மகன் தனது அப்பாவிடம் போய்... "அப்பா...உன்னை மாதிரியே நானும் அரசியலிலே சேர வேண்டும்...தலைவர் ஆகவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். இன்றையிலேயிருந்து எனக்கு அரசியல் பாடம் கற்றுக்கொடு!" என்றான்.

அவரும் சரி என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய ஏணியை எடுத்துக் கொண்டு வந்தார். ஒரு சுவரிலே சாத்தினார். "இந்த ஏணியிலே ஏறி உயரே போய் அங்கே பரண் மேலே இருக்கிற புத்தகத்தை எடுத்துக் கொண்டு வா! " என்றார் மகனைப் பார்த்து!

"அப்பா ... ஏணி மிகவும் உயரமாக இருக்கு.. நீ ஜாக்கிரதையா இதைப் பிடித்துக் கொள்... நான் ஏறிப் போகிறேன்!" என்றான் பையன். "பயப்படாதே... நான் பார்த்துக் கொள்கின்றேன்! " என்றார் அப்பா.

பையன் ஏணியிலே ஏறினான். உச்சிக்குப் போனதும் அப்பா கையை எடுத்துவிட்டார். ஏணி சரிந்துவிட்டது. பையன் பொத் என்று கீழே விழுந்தான். இடுப்பை பிடித்துக் கொண்டே எழுந்தான். "என்னப்பா இது... இப்படி என்னை ஏற விட்டு கையை விட்டுவிட்டாய்!" என்று கத்தினான். அப்பா நிதானமாகச் சொன்னார்.

"அவசரப்படாதேப்பா...அரசியலிலே இதுதான் முதல் பாடம்! பெற்ற அப்பாவாக இருந்தாலும் அவனை நம்பாதே! " என்று உபதேசம் செய்ய ஆரம்பித்தார்!


## இலங்கையில் முதன் முறையாக

# மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையம்


### கிளிநொச்சியில் திறப்பு

(பரந்தன்)

சூரிய சக்தியினால் இயங்கும் மிதக்கும் மின் உற்பத்தி நிலையம் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரின் ஜொரன் லீ எஸ்கடேலினால் கிளிநொச்சியில் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.









யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள பொறியியல் பீடத்திலேயே 42 கிலோ வோள்ட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தியினால் இயங்கும் மின் பிறப்பாக்கி உபகரணம் திறந்து வைக்கப்படுள்ளது.

2017 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்திலுள்ள பொறியியல் பீடத்தினாலும் மேற்கு நோர்வேயிலுள்ள பிரையோக விஞ்ஞான பல்கலைக்கழகத்தினாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமாக இந்த சூரிய சக்தியால் இயங்கும் மின்பிறப்பாக்கி உபகரணம் உருவாக்கப்பட்டுள்ளது.

நோர்வேயிலுள்ள பல்கலைக்கழகத்திற்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும் இவ் ஆய்வை மேற்கொள்ள கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் அனுசரணை வழங்கியுள்ளது.

இவ் ஆய்வுக்கு நோர்வேயிலுள்ள சில தனியார் கம்பனிகளும் இக்குயினர் எனும் நோர்வே சக்தி வலு குழுவும் வழிகாட்டுதல்களையும் அனுசரணையையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரின் ஜொரன் லீ எஸ்கடேலின், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் மேற்கு நோர்வே பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையிலான கைகோர்ப்பாக இந்தத் திட்டம் நிறுவப்பட்டுள்ளது. இதற்கு கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் உதவிகளை வழங்குகின்றது. இந்த புதிய மிதக்கும் சூரிய மின்கலம் நோர்வே கொண்டுள்ள வெளிக்கள மற்றும் கடல்சார் தொழிற்றுறைகளின் அனுபவங்களின் பிரகாரம் அமைந்துள்ளது.

இலங்கையில் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள முதலாவது புதுப்பிக்கத்தக்க வலுப்பிறப்பாக்கல் பங்காக அமைந்துள்ளதுடன் இதனூடாக 42 கிலோ வாற்று மின்சாரத்தை பிறப்பிக்கக் கூடியதாக இருக்கும்.

மிதக்கும் மின் ஆலை போன்ற தூய வலு மூலங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் மின்சாரத்தை பெற்றுக் கொள்வது மக்களின் வாழ்க்கையில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தும். நிலக்கரியில் இயங்கும் மின் பிறப்பாக்கல் ஆலைகள் உள்நாட்டு வளியின் தரத்தில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அவற்றின் காபன் வெளியீடும் காலநிலை மாற்றத்தில் தாக்கம் செலுத்துகின்றன.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இளவயது மரணங்களை ஏற்படுத்தும் காரணிகளில் வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புகளிலிருந்து வெளிவரும்' மாசுகளும் பங்களிப்புச் செலுத்துகின்றன.

இந்த விடயங்களின் பிரகாரம் படிம எரிபொருளிலிருந்து புதுப்பிக்கத்தக்க வலுவுக்கு மாறுவதற்கு சூரிய சக்தி முக்கிய பங்களிப்பை வழங்கும். இலங்கை மற்றும் நோர்வே ஆகிய நாடுகளைச்சேர்ந்த மக்களைப்போன்றே உலகின் அரைப்பங்கு சனத்தொகையினர் கரையோரப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

எனவே மிதக்கும் சூரிய மின் ஆலைகளினால் தூய வலுவை பிறப்பித்து பயனடையக்கூடியதாக இருக்கும். நீண்டகால அடிப்படையில், குளங்கள் மற்றும் திறந்த சமுத்திரங்களில் மிதக்கும் சூரிய வலுப் பண்ணைகளை நிறுவக் கூடிய சாத்தியம் ஏற்படும். இவற்றைப் பயன்படுத்தி நாம் சரியாக செயலாற்றினால் தொழில் வாய்ப்புகளை உருவாக்கக்கூடியதாக இருக்கும். மேலும் நாம் ஒன்றிணைந்து செயலாற்றினால் காலநிலை மாற்றத்தையும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இலங்கையை பொறுத்தமட்டில் நீண்டகால வரட்சி அல்லது தொடர் மழை வீழ்ச்சியை அனுபவிக்க வேண்டியிருக்காது

இந்த மிதக்கும் சூரிய மின் கலம் இலங்கையில் நிறுவப்படவுள்ள பல நிலைபேறான மின் ஆலைகளில் முதலாவதாக அமைந்துள்ளது. இந்த ஒன்றிணைவினூடாக நீண்டகாலமாகப் பேணப்படும் இலங்கை மற்றும் நோர்வே இடையிலான உறவுக்கு மேலும் பிரகாசத்தை ஊட்டுவதாக அமைந்திருக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன் என மேலும் தெரிவித்தார். (9-100-312)

## இயற்கை அனர்த்தத்தால் வருடாந்தம் இலங்கைக்கு 50 பில்லியன் இழப்பு

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தால் இலங்கைக்கு வருடாந்தம் 50 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது.

இது மொத்த உற்பத்தியில் 0.4 சதவீதமாக அமைந்திருப்பதாக உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இந்தப் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இயற்கைப் பேரழிவில் இருந்து எதிர்பாராத சுமை **Contingent Liabilities from Natural Disasters Sri Lanka** என்ற தலைப்பிலான அறிக்கையிலேயே உலக வங்கி இந்த விடயங்களை சுட்டிக்காட்டியது.

இயற்கை அனர்த்தத்தால் வருடாந்தம் வீடுகள், உட்கட்டமைப்பு, விவசாயம் ஆகியவற்றுக்கு ஏற்படும் பாதிப்பு மற்றும் நிவாரணத்திற்காக 313 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டது.

சுமார் 32 பில்லியன் ரூபாய் இழப்பு வெள்ளத்தால் ஏற்படுகின்றது. கடும் காற்றின் காரணமாக 11 பில்லியன் ரூபாய் இழப்பும் வரட்சி மற்றும் மண் சரிவினால் 5.2 பில்லியன் ரூபாயும். சேதங்களுக்காக 1.8 பில்லியன் ரூபாய் இழப்பும் ஏற்படுகின்றது.

2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் 213 பேர் உயிரிழந்தனர். 2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் 13 பேர் உயிரிழந்தனர். 1.2 மில்லியன் ரூபாவை வீடுகளுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு அரசாங்கம் செலவிட்டது. உலகிலேயே காலநிலை மாற்றத்தால் மிக மோசமாக பாதிப்புக்குள்ளாகும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது. காலநிலை் மாற்றம் பாதுகாக்கப்பட்ட அரிசி தயாரிப்பையும் சீர்குலைக்கின்றது.

வரட்சியின் காரணமாக நாட்டின் மின்சார தேவையை சமாளிப்பதற்காக அனல்மின் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்காக 560 மில்லியன் டொலர்களை 2017 ஆம் ஆண்டு அரசாங்கம் செலவிட்டது. இது மொத்த உற்பத்தியின் 0.7 சதவீதமாகும் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

## சுகாதாரத் தொழிலாளர்களின் போராட்டத்தால் வீதியோரங்களில் தேங்கிக்கிடக்கும் குப்பைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்களின் தொடர்ச்சியான போராட்டத்தால் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றன.

கடந்த 22 ஆம் திகதி புதன் கிழமை சுகாதாரத் தொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

இந்நிலையில் சுகாதாரத் தொழிலாளர்களின் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கோ அல்லது மாற்று ஏற்பாட்டின் மூலம் குறித்த கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-10)





# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–199

# வாழ்வியலை வரலாற்றை விழித்துணர்த்தும் அரும்பொருட்காட்சியகம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 212

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பாரம்பரியத்தை பாதுகாக்கும் கடமை எங்கள் எல்லோருக்கும் உண்டு. அதனை திட்டமிட்டு தீர்க்கதரிசனமாக உருவாக்கி எமது அரும்பெரும் சொத்துக்களை பாதுகாக்கவும் எமது சந்ததி அதனை தெரிந்து கொள்ளவும் அருங்காட்சியம் ஒன்றினை நிறுவியிருக்கிறது சிவபூமி அரும்பொருட்காட்சியகம். எமது வாழ்வியலை வாழ்ந்துவரும் தலைமுறையும் இனிவரும் தலைமுறையும் வரலாற்று ஆவணங்களூடாக அறிந்து கொள்ளவும் அதன் மகத்துவத்தை அருமை பெருமையான கிடைத்தற்கரிய காட்சிப் பொருட்களூடாக அறிந்து கொள்வதற்குமாக ஒரு தனித்துவமான காலத்தின் தேவையாக செய்யப்பட்டுள்ள இம் மகத்தான முயற்சியினை அனைவரும் மனதார பாராட்டுதல் தகும். யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் எனக் கருதப்படும் நாவற்குழியில் அமையப்பெற்றிருக்கும் இவ்வாறான அருங்காட்சியகம் தமிழ் மக்களின் வரலாற்றை மிகவும் துல்லியமாக எடுத்துக்காட்டும் கைங்கரியமாகப் பார்க்கலாம். இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியல் விடயங்கள் மறைந்து போகும் தருணத்தில் அவற்றினை மீட்டிப்பார்க்கும் ஓரிடமாக அனைத்தையும் ஒன்றாக்கி ஒழுங்கமைத்து மெய்சிலிர்க்க வைக்கும் அளவுக்கு வாழ்வியல் கலை, பண்பாடு அனைத்தும் சார்ந்த ஆவணங்களை இன்னும் காட்சிப் பொருட்களை மக்கள் பயன்படுத்திய அரும்பெரும் பொருட்களை சேகரித்து அவற்றை காட்சியகப்படுத்தியிருக்கும் விதம் பாராட்டத்தக்கது. வெறுமனே பாராட்டுவதிலிருந்து விடுபட்டு எமது பங்களிப்பாக கிடைக்கக்கூடிய பொருட்களை சேகரித்து இந்த அரும் பொருட்காட்சியகத்தில் காட்சிப்படுத்த வைப்பது எமது கடமையாகவும் கருத வேண்டும்.

தமிழர் தம் வாழ்வியல் ஏனைய மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்கும் என்பதில் வேற்றுக் கருத்திருக்க முடியாது. எமது இயல், இசை, நடனம், உணவுமுறை, பழக்க வழக்கங்கள், பண்பாட்டு முறைகள், கலாசார விடயங்கள் என அனைத்தும் தனித்துவத் தன்மை கொண்டவை. உலகெங்கும் வாழும் அனைத்து மக்களையும் சிந்திக்க வைக்கவும் உள்ளார்ந்து அவற்றை அறிந்து கொள்ளவும் இவ்வாறான அரும் பொருட்காட்சியகம் நிச்சயமாக உதவும். சீர்மிகுந்து வாழ்ந்த வாழுகின்ற இனத்தின் வரலாற்று அம்சங்களை தனித்துவமான பாணியில் அவற்றிற்கான ஆதாரமாக உள்ள பொருட்களுடன் விளக்குகின்ற அரும்பொருள் பொக்கிசம் இந்த அரும்பொருட்காட்சியகம். பலநூறு நாட்களின் தேடல்களில் சேகரிக்கப்பட்ட பொருட்கள் இங்கே காட்சிபடுத்தப்பட்டிருப்பது இம் மக்கள் வாழ்ந்த அந்த அருமையான நாட்களை மீண்டும் மீட்டிப் பார்க்க வைத்திருக்கின்றது.


எப்படி வாழ்ந்த மக்கள், பழக்க வழக்கங்கள், தொழில்நுட்பம் அதிகமாக விருத்தியடையாத காலங்களில் தங்களது விவசாயம், உணவுற்பத்தி, வாழ்க்கை முறைகள், பண்பாட்டு விழுமியங்களை எவ்வாறு பாதுகாத்தார்கள் என்பது இந்த அரும்பெரும் சொத்துக்களின் மூலம் விரிவாக எடுத்துச் சொல்வதற்கான களம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு காரணமான சிவபூமியின் விருட்சமான கலாநிதி ஆறு.திருமுருகனை தமிழ் கூறும் நல்லுலகம் இருக்கும் வரை மனதாரப் பாராட்டுவதுடன் என்றென்றும் நினைந்து கொள்ளும். தேடற்கரிய பொருட்கள், அவற்றின் அலங்கார அமைப்புக்கள், பயன்படுத்தப்பட்ட பொருட்கள், சித்திரவடிவமைப்பு, அழகுக்கலையின் வெளிப்பாடு என பலவற்றையும் எடுத்தியம்புவதும் வரலாற்றை இவற்றினூடாக காட்சிப்படுத்தியிருப்பது பிரமிக்க வைத்திருக்கின்றது.


இத் தேசத்தை ஆண்ட மன்னர்கள், அவர்தம் சீர்சிறப்புக்கள், அந்த காலங்களில் பயன்படுத்தப்பட்ட அன்றாடம் பயன்படுத்தப்பட்ட பொருட்கள், போக்குவரத்து சாதனங்கள், பயன்படுத்திய கருவிகள், இசைக்கப்பட்ட கருவிகள், நடன அணிகலன்கள், புழக்கத்திலிருந்த நாணயங்கள், அரும்பெரும் படங்கள் என வரலாற்று ரீதியாக சேகரிக்கப்பட்ட அனைத்தும் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. சீரும் சிறப்புமாக வாழ்ந்த இனத்தின் அடையாளங்கள் உரிய முறையில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப் பிரதேசத்திற்கு வருகை தந்து எமது வாழ்வியலை அறிய முற்படும் மக்களுக்கு இவ்வாதாரங்கள் நிச்சயமாக பல கதைகளை, வரலாற்றை இன்னும் வழக்கியலை வாழ்வியலை பக்குவமாக எடுத்துச் சொல்லும் என்பதில் ஐயமில்லை. கண்கண்ட காட்சியாக அருமையாக ஆவணப்படுத்தப்பட்ட இவ்வரும் பொருட்கள் இவ்வினத்தின் சொத்து என்றால் மிகையாகாது.

இம் மக்களின் விவசாயம், உணவு அனைத்து வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த அமசங்களாகும். அதற்காக அவர்கள் பயன்படுத்திய பொருட்கள், தாவர இனங்கள், இப் பிரதேசத்திற்குரித்தான அனைத்து உயிரினங்களின் பயன்பாடுகள். எந்தவித ஆதரவுமின்றி சுயமாக வாழ்ந்த வாழ்க்கையின் சிறப்புக்கள் மீண்டும் மீண்டும் ஆய்வுக்குட்படுத்த வேண்டியவையாகும்.

கற்பதற்கும் அறிவதற்கும் ஆய்வு செய்வதற்கும் இன்னும் அடியொற்றி அந்த வாழ்க்கையை வாழவைப்பதற்கும் இந்த அரும் பொருட்கள் கதைகதைகளாக பாடநெறிகளாக சொல்லப்போகின்றன. சுயமாக சுகாதாரமாக வாழ்வதற்கான அம்சங்களை அனைத்தும் இவ்வாவணப்படுதல் மூலமாக சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கின்றது. சுயகட்டுப்பாடு, ஒற்றுமையாக வாழுதல், ஒற்றுமையாக செயறபடுதல், சேமிப்பின் முக்கியத்துவம், சேமிக்கும் முறைகள், சேமிப்பில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் என அனைத்தையும் விலாவாரியாக மொழியின் புரிதலூடாக சொல்லப்பட்டிருப்பது உள்ளத்தில் உரத்தை ஊட்டியிருக்கின்றது. நாம் யார் என்பதற்கான ஒட்டு மொத்த பதில் இந்த காட்சிப் பொருட்களூடாக அவை சொல்லாமல் சொல்லுகின்ற செய்தியூடாக அதற்கேயுரிய பாணியில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும் போது அறியும் போது எமக்குள்ளே எம்மையும் அறியாமல் தலை நிமிர்ந்து நிற்கின்ற உணர்வு மேலோங்குகின்றது.

வாழ்ந்த மக்களில் கலை நயங்கள், சித்திரவடிவங்கள், வாழ்க்கையின் நெளிவுசுழிவுகள், ஏற்ற இறக்கங்கள், பயன்படுத்திய பொருட்களின் கலையம்சங்கள், விழுமியங்களின் வெளிப்பாடுகள் என தனித்துவமான விடயங்களை ஒரு கோர்வையாக கோர்த்து சொல்லியிருக்கின்ற விதத்தை என்னவென்பது. இந்த மக்களின் சிந்தனை, எதிர்பார்ப்பு, அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்த வரலாறு, மற்றைய மதங்களை மொழிகளை சீர்தூக்கி பார்த்த தன்மை, அவற்றுக்கான மதிப்பினை கொடுத்த பண்பு, இணைந்து வாழ்ந்த வாழ்க்கை முறைகள், இங்குள்ள வளங்களை சிறப்பாக பயன்படுத்திய செழுமை, பிறப்பிலிருந்து இறப்புவரை பயன்படுத்திய பொருட்கள், வாழ்க்கை வரலாற்று அம்சங்கள், வரழ்க்கையின் முக்கிய பதிவுகள், உதாரண புருசர்கள், மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிப்போன கதையம்சங்கள், ஏனைய மக்கள் வியப்புடன் எண்ணிப்பார்க்கும் வரலாற்று பதிவுகள் என அனைத்தையும் பகுதி பகுதியாக விலாவாரியாக விளக்கியிருக்கும் பாங்கு தனித்துவமானது.உலக வரலாற்றில் நாவற்குழி அரும்பொருட்காட்சியகம் தனித்துவமான அடையாளத்தைப் பெறும் என்பதில் ஆச்சரியமில்லை.





வரலாற்று ஆய்வுகளுக்கான கற்கைகளுக்கான தளம் இங்கே திறக்கப்பட்டிருக்கின்றது. மாண வர்களின் கற்றலுக்கான அவர்களின் ஆராய்ச்சிக்கான தொழில்நுட்ப கூடமாக இதனை காணலாம். இது ஒரு இமயமலைச்சாதனை.

இதனை ஒப்பேற்றிய பெருமை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனையே சாரும். இவ்வாறான ஒரு பெருந்தகை காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பதில் பெருமை என்றே சொல்ல வேண்டும். பசுமையின் வரலாற்றை வந்து பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். இது மக்களின் சொத்து. ரம்மியமாக வாழ்ந்த வாழ்க்கையின் அடையாளங்கள், வரலாற்றுப் பதிவுகள், கற்றலுக்கான அடித்தளம், கதைகள் பல சொல்லும் கலைக்களம். அனைவரும் நிச்சயமாக இந்த அரும் பொருட்காட்சியகத்தின் காட்சியை தரிசிக்க வேண்டும்.

நேரில் சென்று அங்குள்ள கலையம்சம் கொண்ட காட்சிப் பொருட்களை அவை சொல்லுகின்ற கதைகளை அதனூடாக நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுபவங்களை நிச்சயமாக பெறவேண்டும். ஒற்றுமையாக வாழ்ந்த, வாழுகின்ற, வாழப் போகின்ற ஒரு இனத்தின் அடையாளங்களை நிச்சயம் நம் வாழ்வில் ஒரு தரமாகவாவது தரிசிக்க வேண்டும். இதற்கான சக்தியை எல்லாம் வல்ல இறைவன் அருளுவான் என வேண்டி சிவபூமி அரும் பொருட்காட்சியத்தின் திறப்பு விழாவில் அனைவரும் கலந்து கொள்ள பசுமையின் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.

# உலக யுத்தத்திற்கு இலங்கையை பலியாக்காதே!

# மிலேனியம், சோபா ஒப்பந்தங்களிலிருந்து அரசாங்கம் உடனடியாக விலக வேண்டும்

## அனைத்துப் பல்கலை.பிக்கு ஒன்றியம் போர்க்கொடி






(கொழும்பு)

அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் (எம்.சி.சி) மற்றும் சோபா ஒப்பந்தங்களிலிருந்து அரசாங்கத்தை உடனடியாக விலகுமாறு வலியுறுத்தி அனைத்துப் பல்கலைக்கழக பிக்கு ஒன்றியம் எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டது.

கொழும்பு - காலி முகத்திடலிலிருந்து ஜனாதிபதி செயலகத்தை நோக்கி இந்தப் பேரணி நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியில் அதிகமான பௌத்த பிக்குகள் கலந்து கொண்டதுடன், அமெரிக்காவிற்கு இலங்கையை அடிமைப்படுத்தும் எம்.சி.சி, சோபா ஒப்பந்தங்களை கிழித்தெறி! அமெரிக்க-சீன போட்டியில் இலங்கை சிக்கிக்கொள்ள இடமளிக்காதே! உலக யுத்தத்திற்கு இலங்கையை பலியாக்காதே! போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியும் பேரணியில் பிக்குகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்களின் மத்தியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அனைத்துப் பல்கலைக்கழக பிக்கு ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கல்வல சிறிதம்ம தேரர் கூறுகையில்,

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதே தவிர அவர்களுடைய கொள்கைகளில் எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை. கடந்த அரசாங்கத்தின் இறுதிக்கால கட்டத்தில் எம்.சி.சி.ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதன்போது தற்போதைய அரசாங்கத் தரப்பினர் அதற்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

ஆயினும் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தத்தில் 70 வீத நன்மை பயக்கும் விடயங்கள் இருப்பதாகக் கூறிக் கொள்கின்றர்.

சீனா - இலங்கையை கைப்பற்றும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. அதற்குப் போட்டியாக அமெரிக்கா ஒப்பந்தங்களின் ஊடாக நாட்டைக் கைப்பற்ற முற்படுகின்றது.

ஒப்பந்தங்களின் ஊடாக நாட்டின் வளங்களை விற்கும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் எந்தவொரு ஒப்பந்தத்தையும் உலக நாடுகளுடன் கைச்சாத்திட மாட்டோம் எனக் கூறிக்கொண்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

எனினும் நாட்டிற்குப் பாதகமான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுடனான சோபா ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளார்.

இதன் காரணமாக அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் யுத்தம் ஏற்படும் பட்சத்தில் எமது நாட்டிற்குப் பாதகமான விளைவுகள் ஏற்படும். ஆகவே, இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, எம்.சி.சி.ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை நிறுத்துமாறும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதனையும் மீறி அரசாங்கம் கைச்சாத்திடும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பட்சத்தில் கிராமிய மட்டத்தில் மக்களைத் தெளிவுபடுத்தி நாடளாவிய ரீதியில் பாரிய போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## சனசமூக நிலையத்தின் 41 ஆவது நிறைவு விழா

(கொடிகாமம்)

கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணியளவில் நிலையத்தின் தலைவர் த.பிரதீபன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், மதிப்புறு விருந்தினர்களாக ஜே/290 கைதடி மத்தி கிராம உத்தியோகத்தர் கு.சிவகுமார சர்மா, சாவகச்சேரி சிங்கர் முகாமையாளர் திருமதி மயூரன் சோபனா, சனசமூக நிலைய ஆரம்பகாலத் தலைவர் கு.பூபாலசிங்கம், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அருள்.சிவானந்தன் சமாதான நீதவானாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் கடந்த 20 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அகில இலங்கை ரீதியாகவுள்ள பல்வேறு சமூகமட்ட சேவை அமைப்புக்களில் இவர் அங்கத்துவம் வகித்து அதன் மூலம் மக்கள் பணியாற்றி வருகின்றார்.

குறிப்பாக அகில இலங்கை சைவ மகா சபையின் பொருளாளர், சுழிபுரம் கலைமகள் இலவசக் கல்வி நிலையத்தின் உப தலைவர், கலைமகள் முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் உப தலைவர், கலைமகள் சனசமூக நிலையத்தின் போசகர், மானிடம் அறக்கட்டளையின் பொருளாளர் ஆகிய பொறுப்புக்களை ஏற்று பணியாற்றி வருகிறார். (இ-9)

## சாவகச்சேரி பிரதேச சபையின்

# முக்காவாசிக் காலத்தை நீ தான் விழுங்கினாய்!

## சுதந்திரக்கட்சி உறுப்பினர் மீது தவிசாளர் பாய்ச்சல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சபைக் காலத்தில் முக்காவாசிக் காலத்தை நீ தான் விழுங்கினாய் என சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் கு.குகானந்தனை நோக்கி சீற்றத்துடன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான முதல் அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்ற போதே தவிசாளர் இவ்வாறு ஒருமையில் விளித்துக் குற்றம்சாட்டினார்.

சபையில் பிரேரணைகள் சமர்ப்பிப்பது தொடர்பான நடைமுறைகள் பற்றி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தவிசாளருடன் விவாதித்துக் கொண்டிருந்த தருணத்தில் சுதந்திரக்கட்சி உறுப்பினர் குகானந்தன் அது தொடர்பாக முன்னணி உறுப்பினர்கள் சார்பாக கருத்துத் தெரிவிக்க முற்பட்ட போதே தவிசாளர் குறுக்கிட்டு கடும் தொனியில் சுதந்திரக்கட்சி உறுப்பினரை நோக்கி "சபையின் காலத்தில் முக்காவாசிக் காலத்தை நீ தான் விழுங்கினாய்" எனத் தெரிவித்தார்.

சபையில் பிரேரணைகளை முன்வைப்பதற்கென ஒரு நடைமுறை உள்ளது. ஆனால் இது வரை காலமும் பிரேரணை சமர்ப்பிப்பது தொடர்பில் உறுப்பினர்களுக்கு சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளேன். ஆனால் உறுப்பினர்களோ அறிவித்தல்கள் மற்றும் கோரிக்கைகளையும் பிரேரணைகளாகக் கொண்டு வருகிறார்கள். எதிர்வரும் காலங்களில் ஒருவர் பிரேரித்து இன்னொரு உறுப்பினர் அனுமதித்த பிரேரணைகள் மாத்திரமே சபைக்குள் அனுமதிக்கப்படும். இது வரை காலமும் பிரேரணை சமர்ப்பிப்பது தொடர்பாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட விட்டுக்கொடுப்புக்கள் எதிர்வரும் காலத்தில் இருக்காது. சட்டப்படியே பிரேரணைகள் உள்வாங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் ஒரு தடவை 52 நாள் ஆட்சியாளர்களின் வாரிசுகளால் தான் சாவகச்சேரி பிரதேச சபையில் குழப்பம் ஏற்படுவதாக தவிசாளர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)



# இ.போ.சபை முல்லை சாலை குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு அமைச்சரிடம் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச பேருந்து சாலையில் ஏற்பட்டுள்ள நிர்வாக உத்தியோகத்தர் பற்றாக்குறை மற்றும் சாரதிகள், நடத்துநர்கள் உள்ளிட்ட பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்யக் கோரி முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் ச.கனகரத்தினால் பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பேருந்து சாலையில் உள்ள குறைபாடுகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு அவற்றை நிவர்த்தி செய்யும் நடவடிக்கையில் சில கோரிக்கைகளை பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

31 பேருந்துகளை கொண்ட முல்லைத்தீவு மாவட்ட பேருந்து சாலையில் ஊழியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. பத்து சாரதிகளும், பத்து நடத்துநர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும்.

மாவட்ட சாலையில் உள்ள 31 பேருந்துகளுக்கும் ஒரு திருத்துநர் மட்டுமே இருக்கின்றார். அவரின் கீழ் எட்டு திருத்துநர், தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். அந்த திருத்துநர்களை நிரந்தர மெக்கானிக்கர்களாக நியமிக்கவேண்டும்.

மாவட்ட சாலையில் டீசல் நிரப்பு நிலையம் (பம்ப்) இருந்தும் நிதிப் பற்றாக்குறையால் அவற்றை பொருத்த முடியாத நிலை.

நாள்தோறும் ஆயிரம் ரூபா ஊதியத்தில் பணிபுரியும் 18 தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்த ர நியமனம் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கைகளை பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு எழுத்துமூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் அலுவலகத்திற்கு நேரடியாக சென்றும் முல்லைத் தீவு மாவட்டத்தின் அரச பேருந்து சாலையின் பற்றாக்குறைகள் தொடர்பில் எடுத்துரைத்துள்ளார். (9)

# முறையான சந்தைப்படுத்தல் இன்மையால் முல்லைத்தீவு விவசாயிகள் திண்டாட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் அதிகளவான, விவசாய செய்கைகளை உற்பத்தி செய்கின்றபோதும், அந்த உற்பத்திகளுக்கு முறையான சந்தைப்படுத்தல் வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை எனவும் அதேவேளை விவசாயிகளினுடைய, பல விவசாய நிலங்களை முப்படையினர் ஆக்கிரமித்துள்ளதாவும், இத்தகைய காரணங்களால் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் பெரிதும் இடர்பாடுகளுக்கு முகம் கொடுப்பதாகவும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே விவசாயிகளுக்கான முறையான சந்தைப்படுத்தல் வசதிகள் செய்துகொடுக்கவும், அபகரிக்கப்பட்டுள்ள விவசாயிகளினுடைய காணிகளை விடுவிக்கவும் உரியவர்கள் முன்வர வேண்டுமெனவும் அவர் கோரிக்கை ஒன்றினையும் முன்வைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் மற்றும் பண்ணையாளர் மதிப்பளிப்பு நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது விவசாயிகள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். எனினும் அவர்களுடைய அயராத உழைப்பிற்கான பலன் என்பது மிகவும் குறைவாகும்.

குறிப்பாக எமது விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

கூடுதலான நெல் விளைச்சலினை எமது விவசாயிகள் இம்முறை பெற்றிருந்த போதும் அதற்குரிய சந்தைப்படுத்தல் வசதிகள் சரியான முறையில் இன்மையினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இவை ஒருபுறம் இருக்க, எமது விவசாயிகளின் விளை நிலங்கள் பலவும் இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர், வீமானப்படையினர் என முப்படைகளினதும் ஆக்கிரமிப்பில் காணப்படுகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில், அம்பகாமம் பகுதியில் பல குளங்களினையும், அக்குளங்களின் கீழான பல்லாயிரக்கணக்கான வயல் நிலங்களையும் விமானப் படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர்.

இதேபோன்ற நிலைமைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் காணப்படுகின்றன.

இவ்வாறாக முப்படையினரும், எமது விவசாயிகளுடைய விவசாய நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கும் நிலையில் அந்த விவசாய நிலங்களுக்குரிய விவசாயிகள், தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுத்துச் செல்வதில் பலத்த இடர்படுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறாக விவசாயிகள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும்.

படையினர் அபகரித்து வைத்திருக்கின்ற எமது விவசாயிகளின் விவசாய நிலங்களை அவர்களிடமே கொடுக்கவேண்டும்.

அதேவேளை விவசாயிகளுக்கு முறையான சந்தைப்படுத்தல் வசதிகளையும் செய்வதற்கு உரியவர்கள் முன்வரவேண்டும் என மேலும் தெரிவித்தார். (9)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1955

### லேக்கா

தடுமாற்றம் வரும் நேரத்தில்...



அன்பானவர்கள் அருகில் இருந்தாலே போதும் நம் வாழ்க்கைப் பயணம் நீளும்...

### கோபிநாத்



அன்பு
குறைய
குறைய
குறைகள்
மட்டுமே
பிரகாசமாக
தெரியும்.

### திருச்செல்வம்



உடலின் அழகைவிட உள்ளத்தின் குணமே ஒருவரை அழகாகவும் சிறப்பாகவும்வாழ வைக்கும்!

### அஞ்சலி

இது எவ்வளவோ மேல்.
நான் சந்தித்த மானிடர்களை விட...



### துஷ்யந்தினி



என்னடா வாழ்க்கை இது ஒரு போன் பண்ணி சாப்டியான்னு கேட்க கூட ஆள் இல்லை.

### பீற்றர்

பணம் இருந்தால் தான் நாலு பேர் மதிப்பார்கள் என்றால்...



அந்த மானங்கெட்ட மரியாதை தேவையில்லை.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள்:- குருநகர் செய்தியாளர்)

## சண் சீ கப்பல் விவகாரம்

# 3 தமிழர்களை விடுவித்த கனேடிய உச்ச நீதிமன்றம்

(ரொரண்டோ)

நூற்றுக்கணக்கான தமிழ்க் குடியேறிகளை ஏற்றிக் கொண்டு 2010 இல் பிரிட்டிஷ் கொலம்பியா கடற்கரையில் சண் சீ கப்பல் வந்த பின்னர் மனித கடத்தல் குற்றச்சாட்டில் கைதான மூவரை விடுவித்து கனடாவின் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இம் மனித கடத்தல் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்ட மூன்று தமிழர்கள் தொடர்பான மேன்முறையீட்டை விசாரணை செய்யப்போவதில்லையெனக் கனேடிய உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெளியான இந்த உத்தரவில் மேன்முறையீட்டு விசாரணை விண்ணப்பத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

2010 ஆம் ஆண்டு சண் சீ கப்பலில் கனடாவை வந்தடைந்த தமிழ் அகதிக் கோரிக்கையாளர்கள் கனடாவை வந்தடைந்தமை தொடர்பான வழக்கில் அவர்கள் குற்றவாளிகள் அல்லவென நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட மூன்று தமிழர்கள் தொடர்பான மேன்முறையீட்டையே விசாரணை செய்யப் போவதில்லையெனக் கனேடிய உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

லெஸ்லி இம்மானுவேல், நடராஜா மகேந்திரன் மற்றும் தம்பீர்நாயகம் ராஜரத்தினம் ஆகியோரே இந்த மூன்று தமிழர்களாவர்.

இவர்கள் மீது புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் சாக்கடல் மண்டலங்கள்

(கொழும்பு)

இலங்கையில் சாக்கடல் மண்டலங்கள் ஏற்படும் ஆபத்துக்கள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைய அதிகாரி பிரதிப் குமார இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாட்டின் கரையோரப் பகுதியுடன் இந்த மண்டலங்கள் உருவாக்கப்பட்டால் கடல் சுற்றுச்சூழல் அமைப்பு கடுமையாகப் பாதிக்கப்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

சாக்கடல் மண்டலம் குறைந்த ஒட்சிசன், நச்சு வாயுக்கள் மற்றும் காற்றில்லா நீர் கொண்ட கடலாகும்.

சாக்கடல், பொதுவான கடல் நீரிலுள்ள உப்புத்தன்மையை விட 8.6 மடங்கு அதிகளவு உவர்ப்புடைய நீரைக் கொண்டது.

கடல் மட்டத்திலிருந்து தற்போது 423 மீற்றர் கீழே அமைந்திருக்கிற சாக்கடல் தொடர்ந்தும் கீழிறங்குகிறது.

இந்த இறக்கம் பூமியின் மேல் ஓடுகளின் விரிசலினால் ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் புதிதாக உருவாகிறது மீன் உணவு உற்பத்திப் பிரிவு

(மாளிகாவத்தை)

தேசிய நீர்வாழ் உயிரின வள ஆராய்ச்சி நிறுவனத்தால் (NARA) புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மீன் உணவு உற்பத்திப் பிரிவின் ஆரம்ப நிகழ்விற்கான முதலாவது அழைப்பிதழை கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக பெற்றுக் கொண்டார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்திற்கு நேற்றுச் சென்ற தேசிய நீர்வாழ் உயிரின வள ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகளால் குறித்த நிகழ்விற்கான அழைப்பிதழ் அமைச்சரிடம் வழங்கப்பட்டது.

எதிர்வரும் 5ஆம் திகதி ரஜமாவத்தையில் ஆரம்பிக்கப்படவுள்ள குறித்த மீன் உணவு தயாரிப்பு பிரிவின் ஆரம்ப நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கடற்றொழில்மற்றும் நன்னீர் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா ஆகியோருடன் அமைச்சின் செயலாளர் உட்பட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய நீர்வாழ் உயிரின வள ஆராய்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற "சிறந்த உணவு மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஊடாக கடல் வளத்தை முன்னேற்றுதல்" என்னும் திட்டத்தின் அடிப்படையில் மீனின் கழிவுகளைப் பயன்படுத்தி தரமான மீன் உணவுகளை தயாரிக்கும் எதிர்பார்ப்போடு குறித்த மீன் உணவு உற்பத்திப் பிரிவு ஆரம்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# செய்தித்துளிகள்

## செயற்பட்டு மகிழ்வோம்

(கொடிகாமம்)

மிருசுவில் அ.த.க.பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினராக பழைய மாணவன் (பிரான்ஸ்) க.நிர்மலதாஸ், கௌரவ விருந்தினர்களாக பிரித்தானியக்கிளையின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ம.சிறிதாசன், தென்மராட்சி கல்வி வலய ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் இ.இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-114)

## வீதி புனரமைப்பு



(குருநகர்)

நீண்டகாலமாக குண்டும் குழியுமாக காணப்பட்ட சென்.ஜேம்ஸ் மேற்கு வீதி யாழ்.மாநகர சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மக்கள் போக்குவரத்துக்கு ஏற்ப புனரமைக்கப்பட்டது. (இ-106)

## இலவச கல்விக் கருத்தரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

அமேசன் கல்வி நிறுவனத்தின் இலவச கல்விக் கருத்தரங்கு நாளை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.


இதில் மாணவர்களுக்கும் தொழில் தேடுபவர்களுக்குமான கருத்தரங்கு காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரையும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமான கருத்தரங்கு பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணிவரையும் நடைபெறும். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 280 | 300 |
| தக்காளி | 250 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 100 | 80 |
| கோவா | 160 | 160 | 140 | 200 |
| கரட் | 350 | 400 | 300 | 520 |
| பூசணி | 80 | 60 | 50 | 120 |
| புடோல் | 120 | 140 | 140 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300-400 | 280 | 480 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 120 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 160 | 120 | 110 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 150 | 140 | 180 | 120 |
| லீக்ஸ் | 300 | 350 | 400 | 500 |
| பீற்றூட் | 100 | 120 | 220 | 120 |
| கறிமிளகாய் | 250 | 280 | 170 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 600 | 800 |
| போஞ்சி | 200 | 220 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | – | 80 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 30-40 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 50 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 35-50 | 55 | 40-60 |
| இராசவள்ளி | 180 | 200 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 240 | 220 | 240 |
| முள்ளங்கி | 50 | 80 | 90 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | – | 110 | 80 |




# நேர்மை உயர்வு தரும்



மரியாதை ராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரன் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர். பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்கமாட்டார்.

ஒருமுறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்றுவிட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்து விட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப் பையை தேடி பார்த்து கிடைக்காமல் புலம்பி தள்ளினார். மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டுப் பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

அப்போ அவரது மனைவியார் 'உங்க பணப்பையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்க, கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க' என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லிவிட்டார். ஊர் மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இந்தாலும் கௌரவமாக வாழ பிரியப்படுபவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர்.

அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயம் சரியாக செய்ய முடியவில்லை. வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார். போகிற வழியில் காட்டுப் பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக் கொண்டார்.

அப்படி காட்டு வழியில் போகும் போது அங்கே ஒரு புறா அடிப்பட்டு கீழே கிடந்தது. அதை பார்த்து இரக்கப்பட்ட பூபாலன் அந்த புறாவை தூக்கிக் கொண்டு அருகில் இருந்த குளத்திற்கு கொண்டு சென்று தண்ணீரை எடுத்து அந்த புறாவின் வாயில் ஊற்றினார், பின்னர் அந்த புறாவை அருகில் இருந்த மரக்கிளையில் வைத்து விட்டு வந்தார்.

அவர் அப்படி வரும் போது பாதையின் ஓரத்தில் காலில் ஏதோ மாட்டியதை கண்டார், அது ஒரு ஙப. அதில் நிறையப் பணமும் இருந்தது. அதை எடுத்தவுடன் பூபாலனுக்கு யாரோ பாவம், தன் பணப்பையை விட்டு விட்டுப் போயிட்டாங்க, அப்படி தொலைத்தவர் மனம் எத்தனை வேதனைப்படுமோ, எனவே விரைவில் அவரை கண்டுபிடித்து கொடுத்துவிட வேண்டும் என்று ஊருக்கு விரைந்தார்.

அப்போது ஊருக்குள் சென்ற போது அங்கு இருந்த கடையில் விசாரித்தபோது கடைக்காரர் சோமனைப் பற்றி சொல்லி அவர் தான் தொலைத்தவர், நீங்க இதை கொடுத்தால், கண்டிப்பாக சன்மானம் கொடுப்பார் என்றார்.

உடனே பூபாலனும் சோமன் வீட்டைத் தேடி பிடித்து சென்று பணப்பை கிடைத்த விபரத்தை சொன்னார். சோமனுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. உடனே அந்தப் பணப்பையை வாங்கிக் கொண்டார், அதேநேரம் அவரது கெட்ட எண்ணமும் வெளிப்படத் தொடங்கியது. பணப்பை கிடைத்து விட்டது, பணமும் சரியாக இருந்தது, இப்போ ஏன் இவனுக்கு சன்மானம் கொடுக்க வேண்டும். சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் சோமன்.

கெட்ட மனம்கொண்ட சோமன் பூபாலனைப் பார்த்து 'நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய், நான் என்னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன், அது காணவில்லை. மரியாதையாக கொடுத்து விடு, உன்னை சும்மா விடமாட்டேன்' என்று கத்தினான்.

பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை, ஒருவேளை இவர் சொன்னது போல் வைர மோதிரம் இருந்து தொலைந்து போயிருக்குமா, நாம் தான் எடுக்கவில்லையே. இவரிடம் சன்மானம் வாங்குவதைவிட பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம் என்று யோசித்தார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னதான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர்மக்கள் அனைவரும் மரியாதை ராமன் முன்னால் போய் நின்றார்கள்.

சோமன் தான் பணப்பையையும் அதில் இருந்த வைர மோதிரம் தொலைத்த கதையையும் பூபாலன் தான் பணப்பை கண்டுபிடித்த கதையையும் சொன்னார்கள்.

ஏற்கனவே சோமன் அறிவித்த தண்டோரா பற்றி மரியாதை ராமனுக்கு தெரியும். அப்போ தண்டோரா போடும் போது வைரமோதிரம் பற்றி ஒன்றும் சொல்லாததும் தெரிந்தது தான்.

ஆக மொத்தம் சோமன் ஏமாற்றுகிறான் என்பதை புரிந்து கொண்ட மரியாதை ராமன், சோமனுக்கு சரியான தண்டனை கொடுக்க நினைத்து இவ்வாறாக தீர்ப்பு கூறினார் 'சோமன் தொலைத்த பையில் பணமும், வைர மோதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார். இப்போது பூபாலன் கொண்டு வந்த பையில் பணம் மட்டுமே உள்ளது.

ஆக இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை, அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊரு வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன் கோயிலுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக் கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், சபை கலையலாம்.'

மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.


## பழமொழிகள்

- நல்லவன் என்று பெயர் எடுக்க நெடுநாட் செல்லும்.
- நல்லார் பொல்லாரை நடக்கையால் அறியலாம்.
- நாக்கிலே இருக்கிறது நன்மையும் தீமையும்.
- நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்.
- நக்கிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன?
- நாயைக் கண்டால் கல்லை காணோம், கல்லைக் கண்டால் நாயை காணோம்.
- நாய்க்கு வேலையில்லை நிற்க நேரமும் இல்லை.
- நாள் செய்வது நல்லார் செய்யார்.
- நாற்பது வயதுக்கு மேல் நாய் குணம்.
- நித்தம் போனால் முத்தம் சலிக்கும்.
- நித்திய கண்டம் பூரண ஆயிசு.
- நித்தியங் கிடைக்குமா அமாவாசை சோறு?

## 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## வழிகாட்டுங்கள்



தக்க சமயத்தில் செய்த உதவி
இந்த உலகத்தை விட உயர்ந்தது.
- திருவள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அவர் செய் பெரும் பணியால் எங்கள் தமிழினம் வாழும்

தமிழ் மக்களின் வாழ்வியல் அம்சங்களை அடையாளப்படுத்தாக் குறைகள் எங்கள் இனம் சார்ந்து சிந்திப்பவர்களிடம் நீண்ட நெடுங்காலமாக நிலைத்திருந்தது.

எங்கள் முன்னோர்களின் வாழ்வியல் அடையாளங்கள், அவர்கள் பயன்படுத்திய பாத்திரங்கள் கிலோக் கணக்கில் நிறுக்கப்பட்டு ஏ9 பாதை தாண்டி தென்பகுதிக்கு செல்கின்றமை எம் பலரையும் வேதனைப்படுத்தியது.

எங்கள் தமிழினத்தின் குடும்ப வாழ்வியலில் முதன்மை பெற்றிருந்த நாற்சார வீடுகள் உடைக்கப்பட்டு மிகப்பெறுமதியான நிலை கதவுகளை அறாவிலைக்கு விற்றுவிட, அவையெல்லாம் எங்கள் தேசம் கடந்து போகிறதே என்ற வேதனை இருந்தது.

இவற்றுக்கெல்லாம் ஒரு தீர்வாக சிவபூமி அறக்கட்டளை அமைப்பால் நாவற்குழி மண்ணில் அமைக்கப்பட்ட சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட்காட்சியகம் அமைகிறது.

எங்கள் தமிழர் வாழ்வியலின் பாரம்பரியப் பண்பாட்டு விழுமியங்களுக்கு உதவிய அருங்கலைப் பொருட்கள் பாதுகாக்கப்பட்டு, அவற்றை எம் எதிர்காலச் சந்ததியும் ஏனைய மக்களும் அறிவதற்கான ஏற்பாடாக அரும்பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளமை தமிழ் இனத்துக்குக் கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாகும்.

சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் அயராத முயற்சியால் அரும்பொருட் காட்சியகம் தோன்றிற்று.

அநாதைப் பிள்ளைகளைப் பாதுகாத்தல், மனவலுக்குறைந்த பிள்ளைகளை ஆளாக்கிவிடுவதற்கான மனவிருத்திப் பாடசாலை அமைத்தல், முதியோர்களைப் பராமரித்து அவர்களைப் பாதுகாக்கவென முதியோர் இல்லம் உருவாக்குதல், கீரிமலை மற்றும் திருகோணமலையில் யாத்திரிகர் மடம். நாவற்குழியில் திருவாசக அரண்மனை, இயக்கச்சியில் நாய்கள் காப்பகம், ஆனைக்கோட்டையில் அபயகரம் இலவச மருத்துவ சேவை என கலாநிதி ஆறு திருமுருகனின் நீண்ட நெடும் பணியில்,

இப்போது ஏ9 வீதியில் நாவற்குழி திருவாசக அரண்மனைக்கு அருகில் தமிழ் மன்னர்களின் உருவச்சிலைகளுடன் தமிழர் வாழ்வின் பொக்கிசமாய் அரும்பொருட்காட்சியகம் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

யாருடனும் முரண்படாமல், முட்டி மோதாமல், ஆர்ப்பாட்டம் செய்யாமல், சலசலப்புக் காட்டாமல் செயற்கரிய செய்வர் பெரியர் என்ற வள்ளுவனின் வழியில் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் நம் தமிழினத்துக்குத் தந்த அனைத்தும் அற்புதமானவை - காலத்தால் அழியாதவை.

இதற்காக ஈழத் தமிழினம் என்றும் அவருக்கு நன்றிக் கடன்பட்டுள்ளது.

அவரின் புனிதமான பணியை ஏற்றுக்கொண்டுள்ள உலகுவாழ் தமிழ் மக்கள் அவர் கேட்பதையெல்லாம் வாரி வழங்கி வருகின்றனர் எனும்போது; அவரை எம் தமிழ் மக்கள் எந்தளவு தூரம் உன்னதமாக வைத்துள்ளனர் என்பதும் இங்கு உணர்தற்குரியது.

உலகம் வியந்து நிற்கும் திருவாசக அரண்மனையைத் தந்த கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் அதற்கு அடுத்த படியாக அரும்பொருட்காட்சியகத்தைத் தந்துள்ளார்.

அவர் நினைத்தது நினைத்தபடி நிறைவேறுவதற்கு அவரிடம் இருக்கக்கூடிய ஆன்மபலமும் இறை ஆசியும் காரணமாகும்.

ஆகையால் அவரின் பணி தமிழினத்தை வாழ வைக்கும் என்பது சர்வநிச்சயம்.

# அரசாங்க நிதிக்குழுவின் தலைவராக சுமந்திரனை நியமிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை நியமிப்பதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் நேற்று பிற்பகல் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடிய தெரிவுக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்களும் பெயரிடப்பட்டுள்ளனர்.

வரும் பெப்ரவரி 5ஆம் திகதி குறித்த பெயர்கள் சபையில் அறிவிக்கப்படும் என்பதுடன் இந்தக் குழுக்களுக்கான தலைவர்களின் தெரிவு உறுப்பினர்களின் உறுதிப்படுத்தல்களுடன் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஞா)

## யாழ்.போதனாவில் இரு பெண்களின் கைப்பை திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுப்பதற்கு நின்ற இரு பெண்களின் கைப்பை நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருடப்பட்டது.

வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுப்பதற்காக வரிசையில் நின்ற இரு பெண்கள் உடமையில் வைத்திருந்த கைப்பையே நூதனமான முறையில் திருடப்பட்டது. (ஞா-10)

# ஏழாலைப் பகுதியில் 70 லீற்றர் கசிப்புடன் இரண்டு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட 70 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏழாலையில் ஒதுக்குப்புறமான இடத்தில் இந்த கசிப்பு உற்பத்தி நேற்று முறியடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு 70 லீற்றர் கசிப்பு, சுமார் ஆயிரம் லீற்றர் கோடா, வெற்றுத் தகரங்கள், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கம்பிகள் உள்ளிட்டவையும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் இருவரும் இன்று மல்லாகம் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் கீழ் இயங்கும் சிறப்புப் பொலிஸ் பிரிவே இந்த கசிப்பு உற்பத்தியை முறியடித்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஞா)

# நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு

## 2394 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொலிஸார் முன்னெடுத்திருந்த விசேட சுற்றி வளைப்புகளின் போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 2394 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 14087 பொலிஸார் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, நேற்று அதிகாலை மூன்று மணிவரை இடம்பெற்றதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்போது தேடப்பட்டு வந்த பல சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 1466 பேரும், பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 191 பேரும், சந்தேகத்திற்கிடமான 737 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை தொடர்ந்து சந்தேக நபர்கள் 2394 பேரையும் நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தியுள்ள பொலிஸார், தொடர்ந்தும் இவ்வாறான சுற்றிவளைப்புகளை மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (ஞா)

# யாழில் நாணயக்குற்றிகளை விநியோகிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் வணிகர் கழகத்தின் தொடர்ச்சியான வேண்டுகோள்களுக்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகம் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில்ரூபா 46.5 மில்லியன் பெறுமதியுடைய 8.2 மில்லியன் எண்ணிக்கையான ரூபா 10, ரூபா 5, ரூபா 1 குற்றி நாணயங்கள் வடமாகாணத்தில் வங்கிகளுக்கூடாக இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண பிராந்திய அலுவலகத்தினால் பொதுமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் குற்றி நாணயங்களின் புழக்கம் தொடர்பான தங்களது தேவைப்பாடுகளை நிறைவேற்ற இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண பிராந்திய அலுவலகம் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது. ஆகவே வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் தங்களுக்குத் தேவையான மேலதிக குற்றி நாணயங்களை பெற விரும்பின் மத்திய வங்கியின் வடமாகாண பிராந்திய அலுவலகம் ஊடாக பெறுவதற்கு யாழ் வணிகர் கழகம் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளும் என அறிவித்துள்ளது.

ஆகவே தேவையானவர்கள் இல-165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யாழ் வணிகர் கழகத்தில் விண்ணப்பிக்கலாம்.

வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் இவற்றை தங்களது தேவையின் பொருட்டு உரிய விதத்தில் பயன்படுத்துவதோடு, குற்றி நாணயங்களை ஓரிடத்தில் தேங்காது பயன்படுத்துமாறும் யாழ் வணிகர் கழகம் கேட்டுக்கொள்கின்றது. (ஞா)

# யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக மீண்டும் சேனாரத்ன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இருந்து மேல் மாகாணத்திற்கு இடம்மாற்றம் செய்யப்பட்ட எஸ்.எப்.எம் சேனாரத்ன மீண்டும் யாழ் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படவுள்ளதாக அறிய முடிகிறது.

யாழ் பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய சேனாரத்ன கடந்த டிசெம்பர் மாத இறுதியில் யாழில் இருந்து திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இந் நிலையில் நீர்கொழும்பு பொலிஸ் நிலையம் ஒன்றின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய கே.கட்டுபிடிய பதவி உயர்த்தப்பட்டு யாழ் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் பதவியைப் பெற்று ஒரு மாதம் கூடப் பூர்த்தியாகாத நிலையில் மேல் மாகாணத்தின் தென் பிராந்தியத்திற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளதாக அறியக் கிடைத்தது. (ஞா-10)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

முற்பிறவிகளிலிருந்து வந்துள்ளவையான பற்று, பேராசை, போக நாட்டம் இவையே உலகில் காணும் துயரங்களுக்கும் வீண் பெருமைக்கும் காரணம். தனது சுமையை உணர்கின்ற ஒருவன் தன்னைத் தானே நன்றாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். -புத்தர்

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## இறைவனை வழிபடும் முறை



தூய்மை என்பது அகத்தூய்மை, புறத்தூய்மை என இரண்டு வகைப்படும். உடல் நீராலோ, மண்ணாலோ, வேறு பொருட்களாலோ தூய்மை செய்வது... அதாவது, குளித்தல் போன்றவை புறத்தூய்மை. இரண்டுமே நமக்குத் தேவைதான். அகத்தில் தூய்மை, புறத்தில் அழுக்கு என்று இருந்தால் அது சரியாக இருக்காது.

இரண்டும் சேர்ந்து வாய்க்க முடியாத போது அகத்தூய்மையை நாடுவது நல்லது. ஆனால் இந்த இரு வகை தூய்மையும் இல்லாமல் ஒருவன் யோகியாக மாட்டான். தோத்திரம், சிந்தனை, பக்தி ஆகியவைகளின் மூலம் இறைவனை வழிபடவேண்டும்.

# கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் தேசிய மட்டத்தில் சாதித்த மாணவர்களுக்கு கௌரவிப்பு









கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனையின் ஏற்பாட்டில் தேசியமட்ட விசேட கல்வி விளையாட்டில் சாதனை செய்த சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் இடம்பெற்றது. தேசிய ரீதியில் வெற்றிபெற்ற சாதனையாளர்களை கௌரவிக்கும் ஊர்வலம் கிளிநொச்சி பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகியது. தமிழர் கலாசார விழுமியங்களை எடுத்தியம்பும் மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, பொம்மலாட்டம், புலியாட்டத்துடன் சாதனையாளர்களும் விருந்தினர்களும் அழைத்து வரப்பட்டதை அடுத்து கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தின் இராசநாயகம் அரங்கில் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் தேசிய ரீதியில் சாதனை படைத்த சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடதக்கது. நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க-100)

## வடமாகாண குத்துச்சண்டை வீரர்களுக்கு பாகிஸ்தான் லாகூரில் அமோக வரவேற்பு



கிக்பொக்சிங் போட்டியில் கலந்துகொள்ள பாகிஸ்தான் சென்றுள்ள வடமாகாணத்தைச் சேர்ந்த 7 வீரர்கள் உள்ளிட்ட இலங்கை வீரர்களுக்கு லாகூர் விமான நிலையத்தில் அமோக வரவேற்பு வழங்கப்பட்டது.

பாகிஸ்தான் லாகூரில் கடந்த 22 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச கிக்பொக்சிங் குத்துச்சண்டைப் போட்டியில் கலந்து கொள்ள சர்வதேச குத்துச் சண்டை பயிற்றுவிப்பாளரும் பிரன்ஸ் சவாட் குத்துச் சண்டை அமைப்பின் தலைவருமான சி.பூ.பிரசாத் விக்கிரமசிங்க தலைமையில் இலங்கையில் இருந்து வடமாகாணத்தின் வவுனியாவைச் சேர்ந்த ரி.நாகராஜா, எஸ்.சஞ்சயன், வி.வசிகரன், ஆர்.கே.கெவின்.பி.ராகுல், எஸ். சிறிதர்சன் மற்றும் கெ.நிரோஜன் உள்ளடங்கலாக 22 வீரர்கள் பாகிஸ்தான், லாகூர் விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

இதன்போது தெற்காசியவூசு கூட்டமைப்பின் தலைவரும் பாகிஸ்தானின் ஒருங்கிணைப்பாளருமான மாலிக் இப்திகார் உள்ளிட்ட குழுவினர் இலங்கை வீரர்களுக்கு மாலை அணிவித்து அமோக வரவேற்பளித்தனர். (க-250)

## மன்னார் மாவட்ட அணியுடன் யாழ்.சென்றல், AB அணிகள் மோதல்

மன்னார் மாவட்ட கிரிக்கெட் அணியுடன் யாழ்.சென்றல்,AB அணிகள் மோதும் போட்டிகள் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு மன்னார் மாவட்ட அணி, யாழ்.சென்றல் அணியுடனும், மாலை 2 மணிக்கு AB அணியுடனும் மோதவுள்ளது. என்.பி.எல் தொடருக்காக மன்னார் மாவட்ட அணியினர் 2 பயிற்சிப் போட்டிகளுக்காக யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

## கைக்கொடி மாட்டுச் சவாரிப் போட்டி

சாந்தை ஸ்ரீசிவசுப்பிரமணியம் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு வெண்கரம் அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்படும் மாபெரும் கைக்கொடி மாட்டுச் சவாரிப் போட்டி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு சாந்தை சவாரித்திடலில் பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் கைக்கொடி மாட்டுச் சவாரி போட்டியில் ஐம்பதுக்கு மேற்பட்ட மாடுகளும் வீரர்களும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்







தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் 2020 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழாவினை முன்னிட்டு கழகங்களுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கடற்கரை லிகோரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற கடற்கரைக் கபடிப் போட்டியில் ஆண் மற்றும் பெண் இரு பிரிவுகளிலும் சங்கத்தானை சி.ஆர்.சி. விளையாட்டுக்கழகம் முதலிடத்தைப் பிடித்து சம்பியனாகியுள்ளது. ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தினை தச்சாய் கலைமகள் விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தினை நாவற்குழி சான்றோர் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன. (க-30)



கிளிநொச்சி தர்மக்கேணி அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் கு.குணஜா, சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.காந்தச் செல்வன், பளை கோட்டக் கல்வி அலுவலக கோட்டக் கல்வி அலுவலர் ஐ.குகானந்தராசா, பளை சாரதி பயிற்சி பாடசாலை நிரோ லேணர்ஸ் த.நிரோஜன், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க)

## முதியவரின்...

நேற்றுக் காலை குறித்த சடலம் மீட்கப் பட்டது.

வவுனியா கற்பகபுரம் கிராம சேவை யாளர் பிரிவுக்குட்பட்ட கற்பகபுரம் அ.த.க பாடசாலைக்கு அருகேயுள்ள வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் இருந்தே 78 வயதுடைய இராமன் முருகையா என்பவரின் சடலத்தினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250.299)

## நாட்டின் முக்கிய...

நாட்டில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு பணிப்பாளர்கள் மற்றும் இணைப்பு அதிகாரிகளாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார். இந்த உத்தரவு நேற்றைய தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சம் இளையோருக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தை நிறைவேற்றும் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நந்த மல்வ ஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத் திற்கமைய வறுமையற்ற இலங்கையை கட்டியெழுப்பும் எண்ணக்கருவின் கீழ் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி அமைக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை வடக்கில் உள்ள விடுவிக்கப்படாத பொதுமக்களின் காணிகள் தொடர்பில் வட மாகாண ஆளுநருக்கு உதவுவதற்காக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி கேணல் றொகான் பலாங்கொட ஆளுநரின் இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

வடபகுதியில் உள்ள விடுவிக்கப்படாத பொதுமக்களின் காணிகள் மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்காக குறித்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியை ஆளுநர் நியமித்துள்ளதாக அறிய முடிந்தது. (ஞா-10)

## 13 பேருக்கு...

இந்த உத்தரவு நேற்றைய தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கையின் அரச படைத் தரப்பிற்கும் இடையில் இடம்பெற்ற இறுதி கட்ட யுத்த காலப்பகுதியான கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பில் வைத்து 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு பலவந்தமாக காணாமல் செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு தொடர்பில் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கடந்த 22ஆம் திகதி அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த 13 பேருக்கும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் ரொக்கப்பிணையும் 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தலா இரு சரீரபிணைகளிலும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## கிணற்றிலிருந்து...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மண்கும்பானைச் சேர்ந்த 41 வயதுடைய புலேந்திரன் சக்திகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று நாட்களாக சம்பந்தப் பட்டவரைக் காணவில்லையென அவரது குடும்பத்தவர்கள் தேடிய நிலையிலேயே அவர் நேற்றுக்காலை கிணற்றுக்குள் சடலமாகக் காணப்பட்டுள்ளார். (ஞா)

## காணாமல் ஆக்...

களுக்கு மரணசான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் எதிர்பார்ப்புக்கள், துயரங்கள் எதனையும் கவனத்தில் கொள்ளாமல் பொறுப்பற்ற முறையில் சர்வசாதாரணமாகக் கூறியிருக்கிறார்.

தமது உறவினர்கள் எங்காவது ஒரு இடத்தில் உயிருடன்தான் இருக்கின்றார்கள் என்றும் என்றாவது ஒருநாள் அவர்களின் குரல் தமது காதுகளுக்குக் கேட்கும் என்றும் பல வருடங்களாக துயரத்துடன் வாழ்ந்து வரும் யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி இடும் நோக்கத்துடன் ஜனாதிபதி "இதுதான் உண்மை" என்று தனக்கு தெரிந்த உண்மைகளின் அடிப்படையில் காணாமற்போனவர்கள் இறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ளார்.

ஆனால் ஜனாதிபதி எதிர்பார்ப்பதுபோல இந்தச் செய்தி "போரில் பொறுப்புக்கூறல்" விதிமுறைகளுக்கு அமைவானதாக இல்லை. காணாமற்போயுள்ளவர்கள் போரில் இறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ள ஜனாதிபதி காணாமற்போயுள்ளவர்கள் எங்கே, எப்போது, யாரால் கொல்லப்பட்டார்கள் என்பதனையும் எந்த விசாரணையின் அடிப்படையில் அவர் இதனை கூறியிருக்கிறார் என்பதையும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நாட்டு மக்களுக்கும் கூறவேண்டும்.

விசாரணை ஒன்றை நடத்தியிருந்தால் அது எப்போது, யாரால் நடத்தப்பட்டது என்பதனையும் அவர் வெளிப்படுத்த வேண்டிய பொறுப்புக்கு தற்போது உள்ளாகியிருக்கின்றார். முக்கியமாக காணாமற்போனோர் பலரை இராணுவத்தினரிடம் கையளித்த உறவுகள், நண்பர்கள், நலன் விரும்பிகள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றார்கள். விசாரணைக்கு அவர்கள் எவரையும் அழைத்ததாகக் கூறப்படவில்லை. பின் எவ்வாறான விசாரணையின் அடிப்படையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று மக்கள் அறிய உரித்துடையவர்கள்.

அதேவேளை, 20,000க்கும் அதிகமான மக்கள் காணாமற்போயுள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே. அவர்கள் போரில் இறந்துவிட்டார்கள் என்று ஜனாதிபதி கூறியிருப்பது இறுதிப் போரில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இதனை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடரில் உறுப்புநாடுகள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

உண்மையில் குறித்த தீர்மானம் பற்றியும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் அடுத்து எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனே அந்த உறுப்பு நாடுகளுக்குச் சென்று எமது விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்துவதன் அவசியம் பற்றிப் பேசி வர வேண்டும்.

ஜனாதிபதியின் கூற்று இவ்வாறான நடவடிக்கைகளை மிக அவசியம் ஆக்கியுள்ளது. இக்கூற்றில் இருந்து அரசு ஜெனிவாவில் என்ன கூற போகின்றது என்பதை நாம் யூகித்துக் கொள்ளலாம்.

காணாமற்போனவர்களில் மூன்று வகையானவர்கள் இருக்கிறார்கள். முதலாவது வகையினர் போரின் போது காணாமற்போனவர்கள், இரண்டாவது வகையினர் போர் வலயத்துக்கு அப்பால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், மூன்றாவது வகையினர் போர் முடிந்த பின்னர் இராணுவத்தில் பொறுப்புள்ள அதிகாரிகளின் வேண்டுகோளை ஏற்று அவர்களிடம் சரண் அடைந்தவர்கள் அல்லது பெற்றோர் உறவினர்களினால் ஒப்படைக்கப்பட்டவர்கள்.

இவர்கள் அனைவருமே இறந்துவிட்டார்கள் என்பதே ஜனாதிபதியின் கூற்றின் அர்த்தம். இன்றைய ஜனாதிபதியே போர் நடைபெற்றபோது பாதுகாப்புச் செயளாலராக இருந்ததுடன் தானே போரை வழிநடத்தி முடிவிற்கு கொண்டுவந்ததாக பல தடவைகள் கூறியிருப்பதால் அவரின் கூற்றில் உண்மையிருக்கக்கூடும்.

ஆகையினால்தான் காணாமல் ஆக்கப்பட்ட இத்தனை பல்லாயிரக்கணக்கான மக்கள் எப்படி இறந்தார்கள் என்ற பின்னணி சர்வதேச சமூகத்துக்கும் எமது மக்களுக்கும் முறையான சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றின் ஊடாக தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன்.

இதுவே காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு மன அமைதியை ஏற்படுத்தும். இத்தகைய ஒரு பொறுப்புக்கூறல் நடவடிக்கையே நல்லிணக்கம் ஏற்படுத்த வழிவகுக்கும்.

ஆகவேதான் ஜனாதிபதி தாம் நடத்திய விசாரணை பற்றிய முழு விவரங்களையும் முதலில் வெளிப்படுத்த வேண்டும் அல்லது அவ்வாறு அவர் நம்பத்தகுந்த விசாரணை எதனையும் நடத்தவில்லையானால் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு அவர் வழி வகுக்க வேண்டும். அக்கால கட்டத்தில் போர் முடிந்த பின்னர் எமக்குக் கிடைத்த தகவலின் படி இராணுவத்தினரே மக்களைச் சரணடையச் சொன்னார்கள் என்றும் இராணுவத்தினர் அவர்களைப் பாரம் எடுத்தார்கள் என்றும் கூறப்பட்டது.

அப்படி என்றால் பாரமெடுத்த இராணுவத்தினரைக் கூப்பிட்டு அவர்கள் பொறுப் பேற்றவர்களுக்கு என்ன நடந்தது என்று ஏன் கேட்கவில்லை என்பதையும் ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் என அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஞா)

## சிவபூமி அரும்...

இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனைக்கு முன்பாக சிவபூமி அறக் கட்டளை அமைப்பின் ஸ்தாபகர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஞா)

## உண்டில் உடை...

ஆலயத்தின் உண்டியல் நேற்று அதிகாலை உடைக்கப்பட்டு பெரும் தொகையான பணம் திருடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக குறித்த ஆலயத்தின் நிர்வாகம் நேற்று வெள்ளிக் கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த ஆலயத்தின் உண்டியலில் காணப்பட்ட பணம் சுமார் 18 மாதங்களுக்கு மேலாக ஆலய நிர்வாகத்தினரினால் எடுக்காத நிலையில் குறித்த உண்டியலில் பெரும் தொகையான பணம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஞா-285)

## சிறுபான்மை...

பட்டமையானது ஊடக சுதந்திரம் குறித்த சந்தேகங்களை ஏற்படுத்துவதாக அமைந்ததாக ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண் காணிப்புக்குழு அதன் இறுதி அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அத்தோடு ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம் மீளாய்வு செய்யப்பட்டு. அதன் குழப்பகரமான உள்ளடக் 04


மெகா பவர்
திகதி 2020/01/24
சீட்டிழுப்பு இலக்கம் 0489
Q 17 20 26 58 76

மஹஜன சம்பத
திகதி 2020/01/24
சீட்டிழுப்பு இலக்கம் 4099
K 9 2 5 7 9 1

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 24-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2371
R 04 27 31 35

தன நிதானய
திகதி - 2020.01.24
சீட்டிழுப்பு இலக்கம் - 256
M 16 30 44 64

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 862
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.01.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,750,085/-
16 19 41 60 X

சංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 317
சீட்டிழுப்பு திகதி 24.01.2020 சிவப்பு
U 35 43 51 3
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 50,641,980
2020/01/29 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

B 10 23 36 41
550 பச்சை 24.01 2020 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,000,000
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24/01/2020 வெற்றி வாரம் 2748 வர்ணம் கருநீலம்
மகரம் 09 27 30 41
சனிக் கிழமை வெற்றி பொதி ரூ. 2,376,986
2020/01/25 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS (C-8785)

கனேடிய சுற்றுலா விருந்தோம்பல் கற்கை நிலையம்
Hotel Management
ஆரம்பம் இன்று 25.01.2020
100% வேலைவாய்ப்பு
வெளிநாட்டில் உயர் கல்வி
ஸ்கில் மைகிரேசன் வாய்ப்பு
0213146171, 0760579999
No.1544, K.K.S Road, Jaffna. (C-9060) CTHI

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விற்பனைக்கு
மாற்றுத் திறனாளிகளுக்கான மின்சார ஸ்கூட்டர் விற்பனைக்கு.
(Electric Scooter Disable People)
077 233 4197 (1936)

Rohini Speak - up English Academy
CHARITABLE ORGANIZATION
வதிரி - கரவெட்டி (செல்லையா பாடசாலை முன் வீதி)
உயர்தர (A/L) விஞ்ஞானப்பிரிவு (Science Stream)
சாதாரண தர (O/L) பாட வகுப்புக்களுக்கான
விண்ணப்பம் - 2020
மேற்படி கல்வி நிறுவனத்தினால் பட்டதாரி மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் (O/L) மற்றும் (A/L) கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் ஆரம்பிக்கப்படவுள்ளன.
பதிவுகளுக்கு முந்துங்கள் (C-9050)
உங்கள் விண்ணப்பங்களை பெற இன்றே அழையுங்கள்
077 581 1018, 077 152 1586

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2020 யூலை பரீட்சைக்கான
aat (Sri Lanka)
(aat1, aat2, aat3)
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium:- Tamil & English
ஆரம்பம்:- 01.02.2020
Jaffna College undergraduate Dept. (9032)
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149

CCTV Technician Course
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி
Approved Certificate
வேலைவாய்ப்பு உத்தரவாதம்
29th Batch : 01-Feb-2020
Mobile Phone Repairing Course
15.02.2020 முதல் ஆரம்பம் (C-9051)
ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
021-7306000, 077-6656778


## மோ.சைக்கிளை...

நேற்று வெள்ளிக்கிழமை மாலை புலோலி வடக்கு. உத்திராவத்தை பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி வீட்டில் ஒரு கிழமைக்கு முன்னர் இரவு ஏழு முப்பது மணி அளவில் வீட்டில் நுழைந்த முகமூடி கொள்ளையர்கள் அங்கிருந்த வயோதிப தம்பதியரின் கழுத்தில் வாளினை வைத்து அச்சுறுத்தி அங்கிருந்த 10 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை வயோதிபத் தம்பதிகள் வீட்டின் பின்புறம் நின்றுள்ள நிலையில் வீட்டுக்குள் அத்துமீறி புகுந்த கொள்ளையர்கள் வீட்டினை சல்லடை போட்டுத் தேடியுள்ளனர்.

வீட்டில் ஏதோ சத்தம் கேட்பதாக உணர்ந்த வயோதிபத் தம்பதிகள் வீட்டின் முன்பக்கம் வந்து பார்த்தபோது வீட்டிற்குள் இருந்து இருவர் தப்பி ஓடுவதை கண்டுள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் கூக்குரல் இட்டபோது அப்பகுதியை சேர்ந்த மக்கள் அப்பகுதிக்கு விரைந்து வந்ததையடுத்து வீட்டுக்குள் இருந்து தப்பிச் சென்ற கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளையும் எடுக்க முடியாத நிலையில் மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பி ஓடி உள்ளனர்.

கைவிட்டுச் சென்ற மோட்டார் சைக்கிள் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


தப்பி ஓடியவர்களை துரத்திச் சென்றபோது அவர்கள் ஓடித் தப்பி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளின் இலக்கத்தைக் கொண்டு பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்மூலம் பல கொள்ளைச் சம்பவங்கள் அகப்படலாம என பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஞா-60)

## மரண அறிவித்தல்



பிறப்பு 1945 - 11 - 02

இறப்பு 2020 - 01 - 23

### வேலுப்பிள்ளை குலசிங்கம்

ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குலசிங்கம் 23.01.2020 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - குணரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும் குலசிங்கம் லீலாதேவியின் பாசமிகு கணவரும் ராதிகா, குலநீதரூபன் (பிரான்ஸ்), அமரர் சுபாசினி, சுகந்தினி, குலவதனி, குலபிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாமரை வீதி,
ஆறுகால்மடம் (1985)

தகவல்:
குடும்பத்தினர்


ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org (1936)
021 222 8093
புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.

தேங்காய் கொள்வனவு
● வட மாகாணத்தில் இயங்கும் கம்பனி ஒன்றுக்கு தேங்காய்கள் அதிகளவில் தேவை.
● தொடர்ச்சியாக தேங்காய்களை வழங்கக்கூடிய தென்னந் தோட்ட உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.
● முகவர்கள் தொடர்பு கொள்வதை தவிர்க்கவும்.
● வாகன ஒழுங்கு செய்து தரப்படும்
● விலைக்கு தொடர்ச்சியாக கொள்வனவு செய்யப்படும். (1984)
தொடர்புகளுக்கு:- 076 008 6185

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9015)

யாழ் சர்வதேச கண்காட்சியில் STALL NO C-19 24,25,26 திகதிகளில் வெள்ளி,சனி,ஞாயிறு
கனடாவில் வேலைவாய்ப்பு/உயர்கல்வி
3 year work permits
குடும்பத்துடன் நிரந்தரமாக தங்கலாம்
வருடத்திற்கு 5000 வீசா வாய்ப்புக்கள்
அடிப்படைக்கல்வித்தகுதி :- A/L
● வயதெல்லை :- 19 முதல் 50 வரை
SRILANKAN AIRLIINES உட்பட பல்வேறு விமான சேவைகளில் வேலை செய்வதற்கான கற்கைநெறிகள்
SriLankan Airlines
SriLankan Aviation College
STUDY IN INDIA
100% SCHOLARSHIP
இந்தியாவில்
கல்வி,தங்குமிடம் உணவு 100% இலவச
புலமை பரிசில் வாய்ப்புக்கள் (C-9038)
நேரில் சந்தித்து விபரங்களை அறிந்து பயன்பெறுங்கள் 0768226243


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.